Registered at The
G. P. O' Colombo
As A Newspaper.

# திராவிடன்

8 - APR 1929
JAFFNA

| சந்தா விளம்பரம். | | |
|---|---|---|
| தபாற்செலவின்றி வருஷம் ஒன்றுக்கு | | ரூ. 1-00 |
| தபாற்செலவு உட்பட | ,, ,, | ரூ. 1 25 |
| மலாய்நாட்டிற்கு | ,, ,, | ரூ. 2-50 |
| வி. பி. சார்ஜ் பிரத்தியேகம் | | |
| தனிப்பிரதி 10 சதம். | | |
| முற்பணமாகவே அனுப்பவேண்டியது. | | |

## THE DRAVIDAN.

**A Monthly Newspaper.**

"சமன்செய்துசீர்தூக்குங்கோல்போலமைந்தொருபாற்
சோடாமைசான்றோர்க்கணி."

| விளம்பர விகிதம். | | |
|---|---|---|
| 1 கலம் முதன்முறை | | ரூ. 4 50 |
| ¾ | ,, ,, | ரூ. 3 00 |
| ½ | ,, ,, | ரூ. 2 50 |
| ¼ | ,, ,, | ரூ. 1 50 |
| அடுத்தமுறைகளில் ½ வாசி | | |
| சில்லறை விளம்பரங்களுக்கு ரூபாத்தொகை முற்காசு கட்டவேண்டும் | | |

புத்தகம்—2. { யாழ்ப்பாணம்-சுன்னாகம்:-விபவ௵ பங்குனி௴ ௧௮உ (1929 மார்ச்௴ 31) ஞாயிற்றுக்கிழமை. } இலக்கம்—12.

உ
### கடவுள்துணை.

அங்கிங்கெனாதபடியெங்கும்பிரகாசமா
யானந்தபூர்த்தியாகி
யருளொடுநிறைந்ததெதுதன்னருள்வெளிக்
யகிலாண்டகோடியெல்லாந் [குளே
தங்கும்படிக்கிச்சைவைத்துயிர்க்குயிராய்த்
தழைத்ததெதுமனவாக்கினிற்
றட்டாமனின்றதெதுசமயகோடிகளே
தந்தெய்வமெந்தெய்வமென்று [லாந்
எங்குந்தொடர்ந்தெதிர்வழக்கிடவுநின்றதெது
வெங்கணும்பெருவழக்கா
யாதினும்வல்லவொருசித்தாகியின்பமாய்
யென்றைக்குமுள்ளதெதுமேற்
கங்குல்பகலறநின்றவெல்லையுளதெது வது
கருத்துக்கிசைந்ததுவே
கண்டனவெலாமோனவுருவெளியதாகவும்
கருதியஞ்சலிசெய்குவாம்.

### அழகான பெண்.

அழகான கன்னிகையை ஆராய்ந்து கண்டுபிடிக்கும் ஐரோப்பிய சங்கத்தார் மிஸ் எலிசபேத் சைமன் என்ற ஹங்கேரிய நாட்டுப்பெண் ஐரோப்பிய கண்டத்திலேயே அழகியராணியென்று முடிவு செய்திருக்கிறார்களாம். இப்பொழுது இந்தப்பெண் அமெரிக்காவுக்குச்சென்று அங்கேயுள்ள அழகிய பெண்களுடன் போட்டி போடப் போகிறாளாம். இப்பெண்ணுக்கு இன்னும் இருபது வயது ஆகவில்லை.

### இறந்தவர்களை உயிர்ப்பித்தல்.

செத்தவர்களைப் பிழைப்பிக்கும்ஆராய்ச்சியை நெடுங்காலமாக மாஸ்கோநகரில் செய்துவருகிறார்கள் அதில் ஒருசோதனை செய்துபார்க்குமாறு 29 மணிநேரத்துக்கு முன் இறந்த ஒருவனுடைய உடம்பில்ஒருமருந்தைச்செலுத்தியதால் அவன் உடம்பில் ஒருவித புதிய உணர்வு ஏற்பட்டதாம். ஆனால் ஒருமணிநேரங் கழித்துப் பழையபடி அவ்வுடம்பு பிணமாய்விட்டதாம்.

### யந்திரமனிதனின் சொற்பொழிவு.

முதன் முதலில் செய்யப்பெற்ற இயந்திரமனிதனை ஒருவர் நேரிற்பார்த்து அதைப்பற்றிப் பின்வருமாறு கூறுகின்றார். ஒருமேடையில் ஒருபெரும் உருவம் உட்கார்ந்து கொண்டிருந்தது. இதைப்பார்த்தவுடன் பித்தளை நிறத்தையுடைய ஒரு ராக்ஷதனைப்போல் தோற்றியது. உடல் முழுவதும் நெருங்கிப் பார்த்தவுடன் அலுமினிய உலோகத்தாற்செய்யப்பட்டதெனத் தெரிந்து கொள்ளலாம். பார்க்கப் பார்க்க ஏதோ ஒருபயமானது பார்ப்பவர்கள் மனதைக் கவர்ந்துகொண்டது. அதன் பெரும் உருவமும் அசையாத முகமும் பிறருக்கு அச்சத்தை விளைவிக்காதிருக்கமுடியாது. இதழ்களற்ற பற்களற்ற வாயைத்திறந்து கொண்டு தன் குழிந்த கண்களை உருட்டி விழித்துப் பூஞ்சோலையிற் குழுமியிருந்தவர்களைப்பார்த்து அது பிரசங்கம் புரிந்ததென்றால் யார்தாம் திகைப்புறார்? உடனே அது கீழ்வருமாறு சொற்பெருக்காற்றியது! அடித்தொண்டைச் சப்தத்துடன், சீமாட்டிகளே! சீமான்களே! நான் இதுவரை பொதுக் கூட்டங்களிற் பேசியறியாதவன், ஆதல்பற்றி நான் இதுசமயம் அளவற்ற மகிழ்வெய்துகிறேன் என்று தன் இருப்பைவிட்டெழுந்து கூட்டத்தைப்பார்த்துத் தன் தலையைக் கீழ்ச்சாய்த்து வணக்கத்துடன் பேசியது.

### வெளிச்சம் வீசும் மீன்கள்.

ஆழ்ந்த மகா சமுத்திரங்களின் ஆழங்களில் வெளிச்சங்காட்டும் ஒருவித மீன்கள் வாழ்கின்றனவாம். அவைகளிற் சிலமீன்கள் தங்கள் எதிரிகளிடமிருந்து தப்பித்துக் கொள்ளுவதற்கு வெளிச்சத்தின் உதவியைக்காட்டி எதிரிகளை மயங்கச் செய்கிறதென்றும் வேறுசில மீன்கள் சிறிய மீன்களுக்கு வெளிச்சத்தைக் காட்டி மயங்கச் செய்து அவைகளைப் பிடிக்கிறதென்றும் டப்ளியு பி. மைக்கிருப்ட் என்னும் ரசாயன சாஸ்திரி சொல்லுகின்றார்.

### மகாத்மா தரிசனம்.

அமெரிக்காநாட்டு மிதவைக்கல்லூரியைச்சேர்ந்த சுமார் 100 மாணவர்கள் ஒருகப்பலில் இந்தியாவுக்கு வந்திருக்கிறார்கள். அவர்கள் 14 வயதுமுதல் 75 வயது வரை பலவயதுள்ளவர்கள் அவர்கள் டில்லியில் மகாத்மாவைக் கண்டார்கள் அவர்கள் பலதேசங்களையும் நகரங்களையும் பார்த்துக்கொண்டு வருகிறார்கள் அவர்கள் கங்கையில் நீராடி அதன் அழகை வியந்து போற்றினார்கள். கல்கத்தா மிகவும் அழகிய பெரிய நகரமென்று சொல்லுகிறார்கள் பூலோகத்துப் பெரியமனிதரை நாங்கள் இன்று அரையிலணியப்பெற்ற வேஷ்டியுடன் கண்டோம் நாங்கள் காந்தியைக்காணுமுன்னர் அவரைப்பற்றிப் படித்துங்கேட்டும் அவரைப் போற்றிவந்தோம். அவர் தமது சாதாரணமான நடையுடை பாவனைகளாலும் சிறந்த முறைகளாலும் எங்கள் உள்ளத்தில் உணர்ச்சி ஏற்படுமாறு செய்தார். நாங்கள் வந்திருக்கிற தேசத்தைப்பற்றி அவசரமாக எவ்வித முடிவுஞ் செய்துவிடலாகாதென்றும், ஒருமுடிவுக்கு வருமுன் எல்லா விஷயங்களையும் பார்த்துக்கொள்ள வேண்டுமென்றும் அவர் எங்களுக்கு யோசனை சொன்னார். அதற்காக நன்றிபாராட்டுகின்றோம். என்று அந்தமாணவர்கள் பத்திரிகைப் பிரதிநிதியிடம் கூறினார்கள்.

### நவரசம்.

நம்தேயத்தில் பல சமயத்தவர்களுமிருக்கின்றனர் ஒவ்வொரு சமயத்தவர்களும் தாம் வழிபடும் சமயத்தை அப்போது இகழுவதில்லை இன்னும் பக்கத்துள்ளவர்களையும் தம் சமயத்துக்குச் சேர்த்துவிடுவதிலேயே கண்ணுங் கருத்துமாயிருக்கிறார்கள் நம் சைவசமயமே யென நடிக்கும சில நாகரிகத் துரைமார்கள் கூறுவது சமயத்தில் எதுவும் இல்லை. கடவுள் ஒன்றுதான். சமயமும ஒன்றுதான். அவரவர் வசதிக்கேற்றபடி எச்சமயத்தையும் வணங்கலாம் எனக் கூறுகின்றனர். இவர்களைப் போலொத்த மற்றைய சமயத்தவர்கள் எவரும் இதுமாதிரியாகக் கூறுவதை நாம் காணவில்லையேயெனச்சிலர் வினவுகின்றனர். அத்துரைகளைச்சைவசமயத்தின் உண்மை நிலையை உணராததுரைகளெனக் கூறுவதிற் குற்றமில்லையெனக் கொள்ளலாம்.

* * *

ஒருகூட்டத்தின் மக்கள் தங்களுக்குப் புத்திபோதித்து நல்வழிப்படுத்தும்படியாக ஒருகுருவை யடைந்தார்கள் குருத்தாம் செய்யவேண்டிய கடமைகளில் இதுவே முக்கியமானதெனக் கருதி அக்கூட்டத்தின் மக்களுக்குப் போதிக்கத் தலைப்பட்டனர் இப்போதகம் நாளுக்கு நாள் சில திருத்தமுறையில் வந்துகொண்டாலும் ஆண் பெண் முதலிய ஒவ்வொருவருடையவும் தப்பான முறையில் செய்து வரும் பாவ வெளியீடு முதலியனவற்றைத் தாம் கண்ணாரக்கண்டு போதிப்பதாகவே இவர்கள் கருதினார்கள். கிணறுதோண்டப் பூதம் புறப்பட்ட கதையை ஞாபகப்படுத்தி உடனே அக்குருவையும் அவரின் போதகத்தையும் நீக்கிவிட்டனராம். மக்களெவரும் தாம் செய்துவரும் தீமைகளை மறைக்கவே முற்படுகின்றனர். உலகம் முழுதிலும் அறிஞர் எனக்கொள்ளப்படும் மேதாவிகள் பலரும். அறிஞரும் ஒருவரை யொருவர் அறிவிலாரெனக் கூறுகின்றனர். அறிவுக்குரியோர் எனக்கொள்ளும் எவருந் தாங்கூறும் எதையும் சரியெனத்தீர்க்கின்றனர். சரியெனத்தீர்க்கும் மற்றொன்று சரியில்லாது பிழையெனப் பலரால் கொள்ளப்படுகின்றது ஆகையால் அவரவர் அறிவுக்குரியனவற்றையே எவரும் வெளியிடுவார்கள் எதையும் அவசரத்துடன் பிழையெனக் கொள்வது தகாது.

* * *

காலவசத்தால் ஒருவனுடையதாயார் இறந்துவிட்டாள் அவ்வூரிலுள்ள ஸ்திரீகளெல்லோரும் வந்து எதற்காக நீ கவலைப்படுகிறாய், ஆண்டாண்டுதோறும் அழுது புரண்டாலும் மாண்டார் வருவாரோ? இப்பூவுலகத்தில் தோன்றியயாவரும் இறப்பது சகசந்தானே இதற்காகநீ இவ்வளவு துக்கப்படலாமா? நீ வருந்தப்படாதே. நாங்கள் இனி உனக்குத் தாயாராகவிருப்போம். என்றனர். சிலவாரங்கழிந்ததும் அவன் மனைவியும் இறந்துவிட்டாள் ஆனால் அப்போது தேறுதல் சொல்லிய ஒருவரும் வரவில்லை இதனையறியாத அம்மூடன் முன் என் தாயார் இறந்தபொழுது எல்லோரும் என்தாயாராக இருப்பதற்கிணங்கினர்; ஆனால் இப்பொழுது எனக்கு மனைவியாயிருக்கிறேனென்று சொல்லி ஒருவரும் என்னைத் தேற்றமாட்டேன் என்கிறார்களே என்று கவலைப்பட்டானாம்.

* * *

ஈஸ்வராக்ஞையை வீணிற் சொல்லிக்கொண்டு 'பலி, பலி' என்று வாயில்லா ஏழைப்பிராணிகளின் கழுத்தை அறுக்கின்றார்களே? இது தெய்வத்திற்குஞ் சம்மதமாகுமா? ஐயோ! என்ன அறியாமை!! எவ்வளவு அருமையான சூக்ஷுமங்களுடன் அமைந்த சரீரமே. மிருகங்கள், பட்சிகள் இவைகளுக்கேன் இந்தக்கொடுமை? கடவுளுக்குப்பலி பிரியமாகுமா. பின்யாருக்கும் வெறுக்கப்பட்ட செய்கையே இதனை ஒழியுங்கள்.

### மணித்திரள்.

2-ம் வருடமாணாக்கவகுப்பு மாணவரொருவர் (Second Year Pupil-teacher) தன்னோடொத்த மற்றொரு பாடசாலை மாணவரொருவரிடம், தாம் பயிலும் இலக்கியபாடம் ஒன்றிலுள்ள கடவுள் வாழ்த்தில் தாமறியாத சொற்கள் சிலவற்றிற்குப் பொருள் கேட்டபொழுது அவர் இந்தப் பகுதிகளை ஏன் கவனமாகப் படிப்பான். சோதனைக்கேள்விகள் எப்போதும் நடுப்பகுதியிற்றான் வரும் முன்னும் பின்னும படிப்பது வீண் என்று எங்களுக்கு அந்தப் பகுதிகள் சொல்லித்தரவில்லை என்று விடைகூறினாராம்.

* * *

யாராயினும் ஒருதமிழ்ப் பள்ளிக்கூடமானேஜர் பிள்ளைகள் நன்றாகப் படிப்பிக்கப்படல் வேண்டும்; உபாத்தியாயர்கள் கல்வியறிவுடையவர்களாயிருத்தல் வேண்டும் என்று விரும்புவாராயின் அவர் வித்தியா உலகத்திற்கு ஓர் அதிசய மனிதனாகவும் விரோதியாகவுமே காணப்படுவார். அப்படியொருவர் இருந்தால் அவர் திருவாசணி உலகத்தில் கௌபீனதாரி பைத்தியகாரன், என்னும் முதுமொழியின் செம்மையை அறியாதவர் என்று அவரை நாம் தூற்றவேண்டும்.

* * *

தமிழுலகத்திற்கு நல்லகாலம் எட்டிப்பார்க்கின்றது. ஏன், பிறந்து விட்டதென்றே கூறலாம் காலத்தின் அருமையும் அதை உபயோகிக்கவேண்டிய முறையையும் வித்தியாபகுதியார் நன்குணர்ந்து கொண்டார்கள். தமிழிலக்கணம் படிப்பிப்பதில் அருமையான காலத்தைச் செலவுசெய்வதினால் அவர்களுக்குப் பூரணவெறுப்பே. அது பேச்சு முறையில் தானேவரும் என்பது அவர்கள் திடம்பட்ட கொள்கை அது உண்மையாகவேயிருக்கவேண்டும் இவ்வுண்மையை அறியாமையினாலேயே அகத்தியர் தொல்காப்பியர் முதலியோர் பல இலக்கண நூல்களை இயற்றுவதிலும் இளம்பூரணர் நச்சினார்க்கினியர் முதலியோர் அந்நூல்களுக்கு உரையெழுதுவதிலும் தங்காலத்தைக்கொன்னே கழித்தனர். ஆயினும் அவர்கள் ஆங்கிலமொழியும் அதன் நாகரிகமும் ஒருசிறிதும் அறியாதவர்கள் அதலால் இத்துணை அறியாமை அவர்களிடத்திருக்கக்காண்பதில் வியப்பொன்றுமில்லை அவற்றை நன்கறிந்த வீரமாமுனிவர் முதலிய பிற்காலத்துச்சான்றோர்களும் "தொன்னூல் விளக்கம்" முதலிய இலக்கண நூல்கள் பலவற்றை இயற்றியிருப்பதன் வாயிலாகத்தம் அறியாமையை வெளிப்படுத்தினர். ஆனால் அப்போதெல்லாம் இவ்வுண்மை கண்டுபிடிக்கப்படவில்லை. என்று நாம் திருப்தியடைய வேண்டுமேயன்றி அவர்களைத் தூற்றுவது முறையாகாது.

* * *

செய்யுட்களைப் பாடம் பண்ணுவதில் இருவகைத் தீமைகள் உண்டாகின்றன. ஒன்றுகாலம் வீணாவது மற்றது பிள்ளைகளுடைய மூளைகெட்டுப் போவது. ஒருகுட்டில் இரண்டு பன்றி விழுவதுபோல இவற்றிற்கெல்லாம் ஒரு முறையிலேயே நிவிர்த்தி கண்டுபிடிக்கப் படுகின்றது. கோலாட்டம் முதலிய விளையாட்டுகளும் நக்கூசுக் கிருக்கும் முறைகளும் மற்றுமிவைபோன்ற உபயோகமானவும் இன்றியமையாதனவுமானகாரியங்களைப்பயிற்றுவதில் காலத்தின் பெரும் பகுதியைச் செலவிடுவது. ஊன்றியோசிப்பார் இதில் இன்னும்பல நன்மைகள் இருப்பதைக் காண்பர் சுகாதாரமும் வளருமன்றோ. வேறுநன்மைகள் என்னவென்றால் அவசரத்தில் இப்போது ஒன்று புலப்படமாட்டேன் என்று முரட்டுத்தனம் பண்ணுகிறது மறந்து போகாம லிருந்தால் ஆறுதலாயிருந்து சிந்தித்து மறுமுறை சொல்லுவேன் மன்னிக்க.

* * *

ஒரு ஏகாங்கியான தரித்திரர் அவருக்குக் கை கால்கள் சொத்தி காதும் சற்று மந்தம் கண்பார்வை மங்கல் ஆயினும் புத்திபட்டும் அபாரமாயிருந்தது. இவர் தமது குறைகளையெல்லாம் நீக்க விரும்பிக் கடவுளைநோக்கி நெடுங்காலம் அருந்தவஞ் செய்தனர். கடவுளும் கடைசியில் அவரது தவத்திற்கிரங்கிவெளிநின்று அத் தவசிலரைநோக்கி "யாது வரம் வேண்டும் யாதாயினும் ஒருவரங்கேள், தருவோம் என்று கூறியருளினர். தவத்தியோ தாம் பல காரியங்களை உத்தேசித்துத் தவங்கிடப்ப, கடவுள் யாதாயினும் ஒருவரமே கேட்கச்சொல்லுகின்றாரே. என் செய்வேன் என்று சிறிதுநேரம் சிந்தித்துப்பின்கடவுளைநோக்கி,எம்பெருமானே, யான் எழுநிலைமாடத்தின் மேல்மாடியிலிருந்து எனது பிட்டனுடைய போப்பிள்ளையை என்கையினாலேந்தி அதன்மழலைமொழிகேட்டும் அழகுகண்டும் மகிழ்ந்து என்கையினாலேயே பாலும் சோறும் ஊட்டவேண்டும். இந்த ஒருவரமே யான் தேவரீரிடம் வேண்டுவது, என்றார். அவர் கோரியயாவும் இந்த ஒரு வேண்டுகோளில் அடங்கியிருப்பது கண்டு கடவுளும் மகிழ்ந்து அவ்வாறே தந்தோம் என்று கூறி மறைந்தருளியதாக ஒருகதை கூறுவர். இப்படி ஒரு முறையினாலேயேபலகாரியங்களைச்சாதித்துக்கொள்ளும் விவேகிகள் இப்பொழுது மட்டுமன்று பண்டைக் காலத்திலும் இருந்திருக்கிறார்கள்.

* * *

அன்பு உயிரின் இயற்கைக்குணம் அதை வளர்ப்பதற்குப் பிரசாதனங்கள் ஒன்றும் வேண்டுவதில்லை. அன்புக்கு எதிரிடையான கொடுமையை விளைவிக்கும் குரோதம் கோபம் முதலியன இயற்கைக் குணமன்று செயற்கையாகுண்டாவன. தன் இஷ்ட விரோதமான காரணங்க

(தொடர்ச்சி 4-ம் பக்கம்பார்க்க)

## சந்தாநேயர்களுக்கு ஓர் விண்ணப்பம்.

ஐயன்மீர் தங்களால் வரவேண்டிய திராவிடன் சந்தாப்பணத்தை அனுப்பித்தரும்படிக்குக் கேட்கிறோம். பணம் அனுப்பாதவர்களுக்கு அடுத்தபாதப்பத்திரிகை வி. பி. மூலம் அனுப்பப்படும். தயவுசெய்து V. P. க்குப் பணங் கட்டிப் பெற்றுக்கொள்ளவும்.


# திராவிடன்.

சென்னை:— 1929,
பங்குனிமீ 18உ ஞாயிற்றுக்கிழமை.


கண்ணின்று கண்ணறச் சொல்லினுஞ் சொல்லற்க, முன்னின்று பின்னோக்காச்சொல். குறள்.

## சுகவழி.

சுதந்திரத்திற்கு இன்றியமையாச் சாதனமாயுள்ள அகச்சுத்தி புறச்சுத்திகளைக் குறித்துச் சென்றபத்திரிகையிற் சில கூறியிருந்தோம். தற்காலத்தில் எந்தப் பத்திரிகைகளாயினும் சுகாதாரத்தைப் பற்றிப் பேசாமல் விடுவதில்லை. அரசினரும் மக்களைச் சுகமுடையவர்களாயும் நீண்ட ஆயுளுடையவர்களாயும் ஆக்குவதற்குப் பல வழிகளிலும் உழைக்கின்றனர். அதற்கென்று எத்தனையோ கூட்டங்களும் நடைபெறுகின்றன. அபிமானிகள் தமக்குத் தெரிந்தவற்றையெல்லாம் வீராவேசத்துடன் பேசிமுடித்துவிடுகின்றனர்; எத்தனையிருந்துமென், நோயுந் துன்பமும் வரவர அதிகரித்துக்கொண்டே போகின்றன. ஆயுளுந்தேய்கின்றது. இனுவில் ஆஸ்பத்திரியைப்போன்ற எத்தனையோ ஆஸ்பத்திரிகளும் இடமிடங்கடோறும் வேண்டப்படுகின்றது.

சுகாதாரத்தைப்பற்றிப் பேசிமுழக்குவோர் இவற்றிற்கெல்லாம் காரணம் என்ன என்பதைப்பற்றி மட்டும் சிந்திப்பதில்லை. சென்றகாலத்தில் எவ்வளவுக்கெவ்வளவு பின்னுக்கு நோக்குகின்றோமோ அவ்வளவுக்கவ்வளவு மக்கள் சுகமுடையவர்களாகவும் நீண்ட ஆயுளுடையவர்களாயுமிருந்து சந்தோஷவாழ்வு நடத்தியதாக அறிகின்றோம். ஒரு இனுவில் ஆஸ்பத்திரிகூட இல்லாமலே பிள்ளைப்பேறு முதலியன சுகமாய் நடந்தேறின. இற்றைக்கும் நகராசீமம் எட்டிப்பார்த்த நாட்டுப்பக்கங்களில் போய்ப்பார்ப்போம். அங்கு சுகாதாரவாரங்கள் நடைபெறுவதில்லை. அதைப்பற்றிய சிந்தனையே கிடையாது. ஆயினும் அவர்கள் சுகமாயும் பெலமாயும் இருந்து வாழுகின்றனர். பெண்கள் கருவுற்றதும் 'சாகின்றோமோ பிழைக்கின்றோமோ'' என்று எண்ணியெண்ணி ஏங்குவதில்லை. இவையெல்லாம் எதனால், இனுவில் ஆஸ்பத்திரியோற்றமுன் கருப்பவதிகள் 'கோட்டில்' வீடுகளில் பிரசவித்து 'காம்புச்சத்தரங்'களினுற் சாரியம் நடத்தி அலைந்தார்களாம். அங்ஙனமாயின் அது பரிசோதிக்கப்படத்தக்கதோ? 'கோட்டில்' வீடுகளில் வாழும் ஏழைப் பெண்களில் நூறுபேரையும், மாடிவீடுகளில் வசித்து நாகரீகத்திற் கைதேர்ந்த செல்வப் பெண்களில் நூறுபேரையும் எடுத்துப்பார்ப்போமேயானால் முந்தினவர்களில் நோயாளர் இரண்டுபேரையும் பிந்தினவர்களில் சுகமுடையோர் இரண்டு பேரையுங் காணலாம். இது உண்மையேயன்றோ, அன்றாடம் தொழில்செய்து சீவியம் பண்ணும் ஏழைப்பெண்மக்கள் கருவுற்றால் அவர்கள் இனுவிலுக்குப்போவதில்லை. அந்த யாத்திரை அவர்களுக்கு வேண்டப்படுவதுமில்லை. கிராமாந்தரங்களிலே குடிசை வீடுகளில் பழந்தமிழ் வாழ்க்கையை இன்னமும் விடாமல் கைக்கொண்டிருந்து வாழுவோர் சுகமும் பெலமும் மகிழ்ச்சியுமுடையார்களாய் நீண்டகாலம் உயிர்வாழ்ந்திருக்க, மாடிவீடுகளில் எத்தனையோ சன்னல்களும் வைத்து டிப்பினும் (Tiffin) உலாத்தும் முதலிய நாகரீகசாதாரங்களை விடாது பயின்று வாழும் செல்வச்சீமான்கள் பலர் சீக்கிரம் மாண்டுவிடவும் வேறுபலர் வீட்டுக்குப் பாரமாய்ப் பாயும் படுக்கையுமாய்க் கிடக்கவுங் காண்கின்றோம்.

சுகாதாரத்தை மக்களுள் விருத்திசெய்ய வேண்டினோர் இவற்றிற்கெல்லாம் காரணத்தைக் கண்டறிந்து வெளியிடவேண்டுமேயன்றி அதிகம்பேசுவதினாலும் எழுதுவதினாலும் பயன் விளையமாட்டாது. இந்நாட்டின் இயற்கைக்கும் தமிழ்மக்களின் சுபாவத்திற்கும் முற்றும் மாறுபட்ட வேறுநாட்டு ஆசாரங்களை இங்கு நிலைபெறுத்த முயலுதல் வீணேயாகும். தேரையர் செய்த சுகவழி என்னும் நூலும் திருக்குறளில 'மருந்து' என்னும் அதிகாரமும் போல்வன இந்நாட்டிற்கு வேண்டிய சுகாதாரத்தை யினிது போதிப்பனவாம்.

## அறஞ்செய விரும்பு.

"அத்தமும் வாழ்வு மகத்து மட்டே விழியம் பொழுக, மெத்திய மாதரும் வீதிமட்டே விம்மி விம்மி யிரு, கைத்தலைமேல் வைத்தழு மைந்தருஞ் சுடுகாடு மட்டே, பற்றித் தொடரு மிருவினைப் புண்ணிய பாவமுமே."

அதாவது திரவியமும் போகமும் வீட்டளவிலேயே, கண்களினின்றும் நீர்சிந்த புலம்பும் மெல்லிய மாதர், தெருவாயற்படியிலேயே, தேம்பித் தேம்பி இரண்டு கைகளையும் தலைமேல் வைத்துக்கொண்டு துக்கிக்கும் புத்திரர்கள் சுடுகாடு மட்டுமே, ஆனால் நம்மோடு துணையாக வருவது வினைகளாகிய புண்ணியமும் பாவமுமே என்று பட்டணத்தடிகளும். "இன்றைக் கிருந்தாரை நாளைக் கிருப்பரென் றெண்ணவோ திடமில்லையே" என்று ஸ்ரீ தாயுமான சுவாமிகளும் திருவாய் மலர்ந்திருக்கிறபடி, நாளைகது நாமிருப்போமென்பது என்ன நிட்சயம்? நாம் நாளை மடிந்தால் நம் செல்வம், வீடு, வாசல், மனைவி மக்கள், சுற்றத்தார் யாராவது நம்முடன் வருவார்களா? யாருமே கூடவாரார். ஆனலிம் மண்ணுலகில் நாம் செய்யும் பாவபுண்ணியங்களிரண்டும் நம்முடன் வருமேயன்றி, பிறிதொன்றுமில்லை. ஆகையால் நாம் மோக்ஷத்தை விரும்பி அதற்கு சாதனமாயுள்ள அறத்தைச் செய்ய, பின்வாங்கலாகாது. அதுவும் நாளைக்கென்று பின்போட்டு வைக்கவுங் கூடாது எந்த நிமிஷம் எமன் வருவானென்று சொல்லவு மியலாது. ஆதலால் அறத்தை துரிதமாகச் செய்து மோக்ஷ வீட்டையடைய முயலவேண்டும். அரிய சென்மமெடுத்த நாம் மோக்ஷத்தை யடைய இடைவிடாது முயற்சிக்க வேண்டும். அம்மோக்ஷம் சித்திக்க நாம் தருமத்தைச் செய்ய வேண்டும். அத்தருமத்தைச் செய்ய பொருள் வேண்டும். பொருளுள்ளோர் பொருளையும் அஃதில்லாதோர் வாக்குச் சகாயம், சரீரபிரயாசை முதலியவற்றாலும் தானத்தைச் செய்யக்கூடும். பசியென்று வந்தோருக்கு அன்னமிட சக்தியற்றவர் அன்னமிடும் இடத்தைக் காண்பித்தாலும் புண்யமுண்டாம். அறமொன்றே உயிருக்குத் துணை. அதனாலன்றோ "தருமம் தலைகாக்கும்" என்று ஆன்றோர் கூறியிருக்கின்றனர். "துறந்தாருக்குத் துப்புரவு வேண்டி மறந்தார்கொல் மற்றையவர் தவம்." என்று திருவள்ளுவ நாயனர் சொல்லியிருக்கிறபடி தவஞ் செய்வதிலும் சிறந்தது தருமமேயாம். ஆகவே அறநெறியே முக்கிய நெறியென்றெழுதுவதும் ஒவ்வொருவருடைய கடமையாக இருக்கவேண்டும்.

"பிறக்கும்பொழுது கொடுவந்ததில்லைப் பிறந்து மண்மேல், இறக்கும்பொழுது கொடு போவதில்லை யிடைநடுவிற், குறிக்கு மிச் செல்வஞ் சிவன்றந்ததென்று கொடுக்கறியா, திறக்குங் குலாமருக்கென் சொல்லுவேன் கச்சியேகம்பனே."

அதாவது ஒருவன் (உலகத்தில்) பிறக்கின்ற காலத்து யாதொன்றையும் தன்னுடன் கொண்டுவந்ததில்லை பிறந்து (வாழ்ந்து)இறக்கும் காலத்து தானிதுநாறும் சம்பாதித்த பொருள் கொண்டு போவதுமில்லை பிறப்புக்கும் இறப்புக்கும் மத்தியகாலத்தில் (அதாவது உலகத்தில் வாழுங் காலத்தில்) கிடைக்கும் செல்வம் சிவபெருமான் நமக்குக் கொடுத்ததென்றெண்ணி இப்பவருக்கு கொடுக்காமல் இறந்து போகும் பிரபஞ்ச அடிமைகட்கு நான் என்னவென் றெடுத்துரைப்பேன் என்று பட்டணத்தடிகள்.

ஆன்மாக்களெல்லாம் சகலலோக நாயகராகிய கடவுளுக்கு மீளாவடிமைகள் தமக்குத் திருத்தொண்டு செய்து பிழைக்கும் பொருட்டு ஆன்மாக்களுக்கு இவ்வருமையும் பெருமையுமாகிய மானிட சரீரத்தைத் தந்தருளினவர் அக்கடவுளே. மனிதர்களிடத்திலுள்ள பொருளெல்லாம் அவர் கொடுத்தருளிய பொருளே அப்பொருட்களைக் கொடுத்தருளிய அக்கருணாநிதியின் திருவுளக்கருத்து யாது? சிலர் தருமம் செய்வதிலும் வெளிவேஷக் காரர்களுக்கே செய்கிறார்கள். உண்மையாகவே தரித்திரியமேலிட்டு பசியுடன் உடுக்க உடையுமின்றி வருபவரை துரத்தி விரட்டுகிறார்கள். சிலர் தம்மைப் பணிந்தவர்களுக்கே செய்கிறார்கள் இதுபோன்ற வகைகள் தருமத்திற் குரியனவல்ல. யாராயிருப்பினும் "பாத்திரமறிந்து பிச்சையிடு" என்னும் முதுமொழியைக் கடைப்பிடித்து பிச்சையைப் பெறத் தகுதியுடையவருக்கே கொடுக்க வேண்டும்.

## ஸ்ரீசாரதா தேவியின் அம்சமாகிய ஔவைப்பிராட்டியாரின் அற்புத சரிதை.

வண்ணைநகர் ஸ்ரீ. க. வைத்தியலிங்கபிள்ளை அவர்கள் எழுதியது.

(முற்றொடர்.)

ஔவைப்பிராட்டியார் உபயதம்பதிகட்கும் அறுகரிசி எடுத்தபின்னர் அவ்விவாக மண்டபத்தின்கண்ணே வதிந்த பூசுரர் முதல் புரவலர் யாவரும் ஔவையாரை விளித்து அம்மணி! சில காலமாகக் கொண்மூ வருஷியாது விட்டமையான் அகில மாந்தர் வெப்பத்தினுல் அலமருகின்றமையாதலின், இம்மன்றல் விழா நோக்கவந்த எவரும் யாக்கை தட்பம் எய்தும்வண்ணம் ஓர் பெருமழை வருஷிக்கப் பாடியருளுகவெனப் பிரார்த்திக்க, உடனே ஔவையார் தனது உபாசனமூர்த்தியாகிய கணேசப் பெருமானைக் கருத்திலுன்னி, சிவசந்நிதானத்திற் பொருந்திய கருணையினால் முன்னீரளக்கரார் சூழப்பட்ட வையகத்தை ஓம்பிவருகின்ற வருணபகவானே! சேருமலைத் தெய்வீகனது திருக்கோவலூரில் நிகழுந் திருமணக்காலத்தில் முன்னர்ப்போல லவண சமுத்திரத்தின் மூலத்து சொரிகின்ற மழையை மாற்றி, சுத்தோதக சமுத்திரத்திற் படிந்து அந்நீரைப் பருகிப் பொன்னைப்போல, அருமையாகிய மழையைப் பொழிவாயாக" என்னுங் கருத்தையமைத்து,

"கருணையா லிந்தக் கடலுலகங் காக்கும் [தின்
வருணனே மாமலையான் கோவல்—திருமணத்
முன்மாரி பெய்யு முதுமாரியை மாற்றிப்
பொன்மாரி யாகப் பொழி."

என்னும் வெண்பாவைப் பாடியருளினர். உடனே ஏரி தடாகம் முதலிய நீர்நிலைகளனைத்தும் நிறைந்து வழியும்படி ஒரு பெருமழை பொழிந்தது; அந்தச் சமயத்தில் பாரி என்னும் இடையன், ஔவையாரை அழைத்து, அம்மணி! அடியேன் விவாக விருந்துக்கெனச் சேகரித்து வைத்திருந்த தயிர் நெய் முதலிய யாவும் குறைந்துவிட்டன. அரசர்களோடு பரிவாரங்கள் அதிகமாய் வந்தமையால் ஒன்றுஞ் செய்துகொள்ள முடியவில்லை; விலை கொடுத்தாலும் அகப்படமாட்டாதுபோ லிருக்கின்றதே! தாயே! எனது மரியாதையைக் காப்பாற்றுதிரென வணங்கினன். உடனே ஔவைப்பிராட்டியார் எட்டுணையும் அஞ்சாதே, என அவனுக்குத் தைரியங்கூறி, கணேசமூர்த்தியைப் பிரார்த்தித்து, பெண்ணைநதிக் கரையிலே போய்நின்று,

"முத்தெறியும் பெண்ணை முதுநீ ரதுதவிர்ந்து
தத்திய நெய்பா றலைப்பெய்து—குத்திச்
செருமலைத் தெய்வீகன் றிருக்கோவ லூர்க்கு
வருமளவுங் கொண்டோடி வா."

என்னும் வெண்பாவைப் பாடியருளினர். உடனே அப்பெண்ணையாற்றின் நீர்முழுதும் பாலாகவும், தயிராகவும், நுரைகளெல்லாம் வெண்ணெயாகவும் பொருந்தியிருந்தன. அதைக்கண்ணுற்ற பாரி என்பவன் ஔவையாரது பாதசரோருகங்களில் விழுந்துவணங்கி, எனது குடியைவாழ்விக்கவந்த குலதெய்வமே! காமதேனுவின் கன்றுக்குக் காசினியிலுள்ள எப்பொருள்கள்தான் கைகூடமாட்டா. எனப் பலவாறு துதித்து, தனது பணியாட்களை அனுப்பி, வேண்டியமட்டும் தயிர் பால் வெண்ணெய் முதலியவைகளை மிடாக்களிலும், குடங்களிலும் மொண்டு கொண்டுபோய் தனது அட்டிலில் நிரைத்து, விருந்தாளிகளாகப் போந்த எத்தகையினருக்கும் பால் தயிர் நெய், இவைகளை ஆறுபோலோடும்படி அன்னத்திற் பெய்து அமுதூட்டிவைத்தனன். கண்டோரெவரும் இறும்பூதெய்தத்தக்க கோலாகல வைபவத்துடன் மன்றல்வினையனைத்தும் பூர்த்தியெய்திய பின்னர், பிராட்டியார் வதுவை மண்டபத்தில் வதிந்தோர் யாவருக்கும் தாம்பூலம், சந்தனம், பன்னீர், புஷ்பச் செண்டு முதலிய மங்கல வஸ்துக்கள் யாவுமீந்து உபசரித்துச் சேர சோழ பாண்டியர் முதலிய மூவேந்தரோடு மற்றையமேலோர்களையும் விளித்து ஐயன்மீர்! நீவிர் எல்லீரும் இக்கிழவியின் அருமையை உணர்ந்து சமூகமளித்து இவ்விவாகமகோற்சவத்தை எட்டுணையும் விக்கினமின்றி நிறைவேற்றிவைத்ததற்காக பூரண ஆயுளும் அட்டஐஸ்வரியங்களும் பெற்று வாழும்வண்ணம் அடியார்கழுக் கெளியனாகிய அம்பிகைகேள்வன் அருள்புரிவாராக" என்று ஆசிகூறினர். அதன்பின்னர் மலைநாட்டரசராகிய சேரமான்பெருமான் பிராட்டியாரை நோக்கி, அம்மணி! நீர்வரகவி என்பதை இக்கலியாணமண்டபத்திற் குழுமிய பண்டிதர் பாமரர் யாவருந் தெளியும்வண்ணம், நெடுங்காலத்துக்குமுன் தறித்து விறகாய்க்காய்ந்து வெளிக்காவணத்தில் நாணகாட்டியிருக்கும் இப்பனந்துண்டமானது வெள்ளிய குருத்தீன்று இளம் பனைபோலாகிப் பாளைவந்து நுங்குமுற்றிப் பழம் அளிக்கும்படி ஒரு செய்யுள் பாடவேண்டுமென்று கேட்டனர். ஔவையார் அவ்வினவை யங்கீகரித்து, தமது உபாசனமூர்த்தியாகிய கணேசப் பெருமானைப் பிரார்த்தித்து அப்பனந்துண்டத்தைப் பார்த்து,

"திங்கட் குடையுடைச் சேரனுஞ் சோழனும் பாண்டியனு, மங்கைக் கறுகிட வந்தநின் றூர் மணப் பந்தரின்கீழ், சங்கொக்க வெண்குருத் தீன்றுபச் சோலை சலசலத்து, நுங்குக்கண் முற்றி யடிக்கண் கறுத்து நுனிசிறுத்துப், பங்குக்கு மூன்று பனம்பழம் போடு பனந் துண்டமே."

என்னும் ஐந்தடிக்கட்டளைக் கலித்துறை பாடியருளினர். உடனே அப்பனந்துண்டம் ஓர் பனையாகி வளர்ந்து பாளைவந்து நுங்குபிடித்துப் பழங்களை வழங்கியது. (தொடரும்.)

## "ஆலயம்" என்னும் நூலிலிருந்தெடுக்கப்பட்டது.

(முற்றொடர்.)

### ஆலயங்களின் தற்காலநிலையும் பயனற்ற வீண் செலவுகளும்.

ஆலயங்கள் தற்காலம் காமம், வெகுளி, லோபம் முதலாம் தீய குணங்களையுடையோரது குகைகளாக இருக்கின்றன. அவ்விடங்களில் சிவமணங்கமழ்வதெவ்விதம்? அன்பும், அருளும், ஒற்றுமையும் எவ்விதமுறையும்? கோயில் அர்ச்சகர்களையும் முதலாளிகளையும் பணப்பேய் தன்வசமாக்கிக்கொண்டிருக்கின்றது. கோயில் உரிமைக்குக் கோடேறி வழக்கிட்டு வாதாடுவோர் எத்தனைபேர். கோயில்களில் செம்பு முதலிய லோகங்களினுல் செய்த விக்கிரகங்கள் தானே யென்று எண்ணி எத்தனை அடாத செய்கைகளைப் புரிகின்றனர். ஆலயங்களில் அநேகமாய் அந்தணர்களே அர்ச்சகர்களாக இருக்கிறார்கள். அவர்கள் பிறவிப்பிராமணர்களாகவே தீண்டாமையை அரணாக்கொண்டு சீவிக்கிறார்கள். பிராமணத்துவம் கமழ்வதில்லை, எவ்விதச் சமயபோதனையையும் இருளில் இருப்போர்க்கு ஊட்டுதல் காண்கிலோம்.

தற்காலம் ஆலயங்களைத் தாசிகள் நடனஞ் செய்யும் வீதியாக அன்றோ காமாந்தகர் கருதுகின்றனர். இத்தாசிகளால் எத்தனைவாலிபர் கெட்டொழிந்தனர் மாதர்களும் மதியிழந்து இத்தாசிகளின் ஆசாபாசமான நடனத்தைப் பார்க்க என் அவாவுகிறார்கள்? அவர்கள் அறியாமையே அதற்குக் காரணமாகும். சகோதரிகளே! சகோதரர்களே! இன்றே உங்கள் உள்ளத்திலிருந்து இத்துராசையை அகற்றிவிடுங்கள்.

அடுத்தபடியில் வாணவிளையாட்டால் விளையும் சீவமோசமும் பணச்செலவும் கணக்கற்றன. இதை எவரும் எளிதில் அறிந்துகொள்ளலாம். திருவிழாவிற்குச் சனங்கள் வரவேண்டுமென்று எண்ணி வாணவிளையாட்டிற்கும் தாசி ஆட்டத்திற்கும் வீணே பணத்தை அள்ளி வீசவேண்டாம். அவசியமற்ற வாணவிளையாட்டிற்கு அள்ளிக் கொடுக்கும் பணம் உங்கள் ஊரைவிட்டு அன்னியதேசம் போவதை உணர்ந்துகொள்ளுங்கள். உங்கள் சகோதர ஏழைகள் கஞ்சிக்குங் கலங்குவதைக் கண்கூடாகக் காணவில்லையோ? அவர்கள் ஒவ்வொருவரும் சிவபிரான் உறையுங்கோயிலாகிய உடலைத்தாங்கி நிற்கிறார்களே. வீணே செலவிடும்பணத்தைக்கொண்டு உங்கள் ஏழைச் சகோதர சகோதரிகளுக்கு ஏன் ஊண், உடை உதவிப்போற்றக்கூடாது?

தாசிகள் ஆட்டத்திற்கும் வாணவிளையாட்டிற்கும் வீசும் பணத்தில் சிறுதொகையைக் கொண்டு உங்கள் திருவிழாநாளில் உங்கள் போல் நீங்கள் ஓர் சமய அறிவு விருந்து அளித்தல் எவ்வளவோ மேலானது. அவ்வித ஒழுங்குகளை ஒவ்வொரு கோயில்களிலும் செய்தல் தருமமாகும் அதனால் சகலரும் இம்மையிலும் மறுமையிலும் பேரானந்தத்தை அடைவார்கள்.

(முடிவுரை.)

சகோதர சகோதரிகளே!

ஆலயங்களின் பரிசுத்தத்தன்மையையும் ஆலயவழிபாட்டிற்கு எவ்வித ஆசாரத்துடன் செல்லவேண்டுமென்பதையும் அறிவுக்கெட்டிய அளவு சுருக்கமாகவும் விளக்கமாகவும் கூறியிருக்கிறோம்.

கல்வியறிவு இன்றேல் எதையும் அறிதல் முடியாது. ஆகையால் ஆண்பெண் இருபாலாரிடையும் கல்வி அறிவு புகவேண்டும் கல்வியும் தற்காலத்து நாகரீகக்கல்வியல்ல. சமய அறிவையும் இல்லறவாழ்க்கை ஓம்பலையும் வறுமைப்பிணியை நீக்கும் வழியையும் போதிக்குங் கல்வியேவேண்டியது. சிவமணங் கமழுஞ் சைவசமயத்தின் உண்மையை ஒவ்வொருவரும் உணர்ந்துகொள்ளல்வேண்டும் கடவுள் வழிபாட்டிற்கு எவ்வித ஆடம்பரமும் வேண்டியதில்லை அருள்வடிவாய் இருக்கும் ஆண்டவனை அழுதும், அலறியும், நெஞ்சுருக அர்ச்சித்தும் அவனருள் அடைதல் வேண்டும். அவனருள் அடைந்து பிறவிப்பிணியை நீக்கவேண்டும். ஒவ்வொருவரும் தேசத்தொண்டிலும் ஆலயத்தொண்டிலும் தூயமனத்தராய்ப் பணியின் மகிமையை அறிந்து பணிசெய்தல்வேண்டும். சைவசமயத்தின் தூயகொள்கையாம் சமரசத்தை ஒவ்வொருவரும் உணர்ந்து அதன்படி ஒழுகுதல் வேண்டும். சமரச சன்மார்க்கத்தையும் சைவசமய உண்மையையும் எங்கணும் சமய பக்தர்கள் பிரசங்கவாயிலாகப் பரப்புதல் நலனுகும். பள்ளிக்கூடம் ஆலயம் முதலாம் பொதுத்தலங்களில் உயர்ந்தோர் தாழ்ந்தோரென்ற வித்தியாசமின்றிச் சமவுரிமை அளிக்க முயலல் ஒவ்வொருவருடைய கடமையுமாகும்.

## சூதுவிரும்பேல்.

சூதாடுதல் பஞ்சமா பாதகங்களில் ஒன்று. தருமத்தையே போற்றி வளர்த்த தருமமஹாராசன், தருமர் ஆதியோரும் சூதாடியதால் மீளாத் துயர்க்காளாகினர் எனில் அற்ப நிதியுமில்லாத நம் வாலிபர் சிலர் தம் பொழுதைச் சீட்டாடுவதிலேயே கடத்துவதென்றால் அவர்கள் அதனால் எய்தக்கூடிய கேடுக்கு அளவுண்டா? சூதாட்டம் சீட்டாடுதல் இவைகளிலுள்ள தீமை என்ன? பிறர் பொருளைக் கவர்ந்து கொள்ள விச்சிப்பதே சூதாட்டத்தின் முதல் காரணம். தான்

பாடுபட்டுத்தேடிய பணத்தை அளவோடு செலவு செய்து அதனால் எய்தக்கூடிய நன்மையை கிரமமாக அனுபவியாமல் அக்கிரமமான வழியில் சென்று பாவமும் பழியையுமே தேடிக் கொள்ளுகின்றான். மாயச் சூதாடிப் பிறர் பொருளைக் கவர்ந்து கொள்பவன் நிமையிலாழ்வதேயல்லால் வேறு எதைக் காணப் போகின்றான். சாதாரணமாக அதிலும் அனேகமாக ஏழைகள் தம் கஷ்ட ஜீவியத்தினால் தேடிய பொருளை யிழக்க ஒரு சிலர் மொத்தமாகச் சேர்த்த பொருளில் ஒரு பாகத்தைப் பெறுகிறார்கள். வெற்றி பெற்றவன் பெறும் பொருள் பலரின் சாபத்தையும் கோபத்தையும் ஏற்று வரும் பொருளாம்; அது ஏதோ ஒரு அநியாயமான வழியில் செலவழிந்து போய் விடுவதும் உண்மையாகும். இதன் ஒருபாகத்தை மாத்திரம் பெறுவதற்காய் உதவிபுரிய முன்வந்த ஒருவனையே பாவமும் பழியும் பலவழிகளிலும் கேடுறச் செய்கின்றனவாம். சூதாடத்துணிந்தவன் வீட்டிலுள்ளவர்கள் பசிபட்டினி கிடப்பவராயினும் அதனை ஒரு சிறிதும் சட்டைசெய்யாது, தனக்கு வேண்டிய பொருளைக் கடன் வாங்கிக் கொண்டாகிலும் புறப்படுகிறான். பணமுள்ளவன் தாராளமாய் வேண்டிய பொருளை எடுத்துச் செல்கிறான். அநியாய வட்டிக்குக் கடனைக் கொடுத்து மனிதகுலத்தை நாசப்படுத்தும் பணம் படைத்த சிலர் சனியனைப் போல் இவர்கள் பின் தொடருகிறார்கள் ஓமாயச்சூதே! உனது புகழை எழுதும் தரமன்று! வாய்மதம் பேசும் வயபரைக்கூட மடக்கி ஒடுக்கி அடக்கிவிடும் உன்திறமே திறம்! ஐயோ! அறத்தைப்போற்ற, தருமத்தைவளர்க்க, மனிதர்கள் நல்வழிப்பட, ஒருசங்கம் சுமப ஏற்படுவதே அரிதாயிருக்கிறது. இன்னும் இதைப்பற்றி நாம் பலவற்றையும் சொல்லுதல் வேண்டாம். தெய்வ கவிஞர் புகழேந்திப்புலவர் சூதை வர்ணனை செய்வதைக் கேட்டாவது, இன்னுங் கெடுகிறேன் என்னபந்தயம் என்று மார்தட்டிநின்று ஒக்றெய்தி நாறிழக்குஞ் சூதாடிகளே! அதனை விட்டொழியுங்கள்.

"அறத்தைவேர்கல்லும், அருநரகில் சேர்க்கும், திறத்தையேகொண்டு அருளைத் தேய்க்கும், மறத்தையேபூண்டு விரோதம் செய்யும் பொய்ச்சூதை மிக்கோர்கள் தீண்டுவரோ?"

## எதற்கும் பின்போடாதே காலம் சென்றுகொண்டிருக்கிறது.

நம்மையறியாது காலம் சென்று கொண்டே யிருக்கின்றது. நாமும் உண்டு உறங்கி உயிர் வாழ்ந்துகொண்டே யிருக்கின்றோம். கடந்துபோன காலத்தை நாம் கணக்கில் எண்ணிவிடலாம்; சென்றுபோன நாட்களின் விஷயங்களை ஞாபகத்தில் எடுக்கலாம் ஆனால் சென்றுபோன நாட்களோ மீண்டு திரும்புதல் அரிது. இனிமேல் நடக்க விருக்கும் காலத்தையும், அக்காலத்தில் செய்யக்கூடிய வேலைகளையும் நினைவுகூரவும் எவராலும் முடியாது. ஒரு கருமத்தைத் தொடங்கி அதற்குத் தகுந்த முயற்சிகள் செய்து முடியக்கூடிய காலத்தை எதிர்நோக்கி அக்காலம் நேர்ந்த சமையம் அவன் தக்கபடி வேலைசெய்து அதன் பயனை அடையாமற் போவானானால் திரும்பவும் அது போன்ற சமயம் வாய்ப்பது அரிதாகவே முடியும் இத்துணை அருமையான காலத்தை வீணே கழித்தால் அது நமை நாமே கெடுத்துக்கொள்ளுவதற்கொப்பாகும். காலம் கருதி வினை ஆற்ற முற்படல் வேண்டும். உன் வாழ்நாளை எண்ணிப்பார்; இப்பொழுது உன் வயதென்ன? இன்னும் எவ்வளவுகாலம் ஜீவிப்பாய்? உன் ஆயுளில் எவ்வளவைக் கழித்திருக்கிறாய்? என்பதை நீ அறியமாட்டாய். உன்வாழ்வு இன்றோ நாளையோ சொல்லமுடியாது. ஒருவர்மாத்திரம் அறிவார் உன் வாழ்நாட்களை எவ்விதம் களித்தாய்? துன்பத்திலோ இன்பத்திலோ பாவத்திலோ பகைமையிலோ கழித்திருக்கவேண்டும். கழிந்தது போக மீதியையாவது முயற்சியின்பொருட்டு உபயோகி. இனிமேலாவது கலத்தை விரும்பு அதனையே ஆதாயப்படுத்து நெறி தவறாதே ஊக்கத்தைக் கைநெகிழவிடாதே எதிலும் உற்சாகமுடையவனாயிரு. செய்யவேண்டிய எதையும் உடன் செய். நாளைக்குச் செய்யவேண்டுமென்று தவணையிட்டுக் கொள்ளாதே. வீண்வாதஞ் செய்யாதே. சோம்பேறி தரித்திரமடைவான் என்பதை மறவாதே. ஆகையால் நினைத்த காரியத்தை நிறைவேற்றாது விட்டுவிடாதே காலமானது நம்மை ஆதாயப்படுத்துகின்றது இதை நாம் நினைக்கின்றோமில்லை நாளை உதயமாகும் சூரியனைத் தரிசிப்போம் என்கிற நிச்சயம் எவருக்கும் இல்லை "பகற்காலமானால் பல கூகைகளை ஒரு காக்கை வென்றுவிடும் இரவானாலோ பலகாக்கைகளை வெல்ல ஒரு கூகையே போதும், என்றபடி காலமே வலியாரை மெலியாராகவும், மெலியாரை வலியாராகவும் செய்யுமென்பது தெரியவருகின்றது. ஒருவன் தன் மனத்திடமாக எதை நினைத்து மனனம் செய்கின்றானோ அவன் மனப்படியே யாவும் நடந்தேதீரும் இதனைக் கருதிப் போலும் "மனம்போல வாழ்வு" என்று அறிஞர் முதுமொழி கூறுகின்றது.

## சுதந்தர உணர்ச்சி.

திராவிடனுடைய மூன்றாம் வருடம் ஆரம்பமாகிவிட்டது. சென்ற இருவருடமும் மிகவும் பண்பும் பயனுமுறவிளங்கிற்று இன்னும் பல்லாண்டு அறிவொளி பரப்பித்திகழ வேண்டுமென்பது யாவருடைய விருப்பமுமே. ஏனைய பத்திரிகைகளைப்பார்க்கிலும் இப்பத்திரிகையினது பொறுப்பு மிகப்பாரமானது இந்தப் பத்திரிகை யாற்றவேண்டிய தொழில்களோ மிகப் பலவும் பெரியவைகளும். ஆகையினால் ஒவ்வொருவருடைய அனுசரணையையும் இந்தப் பத்திரிகை வேண்டிநிற்கின்றதென்பது சொல்லாமலே விளங்கும். அறிவுடைய மக்கள் யாவரும் இதற்கு அன்புகூர்ந்து ஆதரவு புரிய வேண்டும்.

தாழ்த்தப்பட்ட சாதியார் என்றழைக்கப்படுவோர் யாரென்று யாவருமறிவர். ஆனால் அவர்கள் மாத்திரந்தான் தாழ்த்தப்பட்டார்கள் என்று சரித்திரபுலமையுடையார் ஒருபோதும் கூறமாட்டார், இவர்களோடு ஏனைய இந்திய நாட்டுமக்கள் யாவரும் தங்களரசியலை இழந்த காரணத்தினாலே, ஒருகாலத்திற் தாங்கள் எய்தியிருந்த உன்னதபதவியிருந்து இழிந்து தாழ்ந்தார்கள். இப்படித் தாழ்த்தப்பட்டோர் ஒன்றிற்கு மேற்பட்ட பல சாகியத்தார் இவர்கள் யாவரும் தமிழ் மக்கள். ஆனால் இவர்கள் மாத்திரம் தங்களைத் தாழ்த்தப்பட்ட சாதியாரென்று கூறுவது உண்மையன்றோ வெனில், ஆம், ஆம் அவர்கள் கூற்றும் உண்மைதான் எப்படியோவெனில், வைசிய-சூத்திர என்ற வர்ணப் பகுப்புக்களோ, சாத்திரங்க (வைதிக)ளுக்கும் கர்மவிதிக்கும் மிக்க இணங்கும் பகுப்புகளாகும்.

இவைகளில் பிந்திய மூன்று வருணத்தாருக்குள்ளும் நிலமாற்றத்தினால் மிகக்கலப்புண்டாயிற்று—இவைகளில் நான்காவது பகுப்பாகிய சூத்திரவகுப்பில் எத்தனையோ சாகியத்தாருண்டு அவைகள் யாவும் தொழிற் சிறப்பும் ஒற்றுமை வாழ்வும் பற்றியெழுந்தன. இந்த நான்கு வருணத்தாரும் மதக்களிப்புற்றுச் சோர்வுபட அன்னியர் ஓர் அடுக்கின்மேல் மற்றவோர் அடுக்காக இவைகள் யாவையுமொருங்கே விழுந்தன. விழுந்தவர்களில் வேளாளர் முதலியோர் அரசையடைந்து சீவனூர்த்த மார்க்கத்தங்கள் வாழ்க்கையிலே விழுந்தும் விழாதவர்கள்போல ஒருவாறு மிதந்தும்விட்டனர். ஆனால் அறியாமையினாலே தங்கள் சகோதரரிற் சிலர் கீழ்வரிசையிற் சிக்கிக்கொண்டார்களேயென்று நினைத்தவர்களுந் தங்களைப்போல மேலே வரட்டுமென்று வழிவகைகளைத் தேடாதிருந்ததுமன்றி வலிந்துமவர்களை மிதக்கவொட்டாமற் தடைகளும் பண்ணிவந்தனர். இஃதெல்லாவற்றிற்கும் சுருங்கிய அறிவும் சுயநலமுங் காரணமேயன்றி வேறொன்றுமில்லை. பரந்தநோக்கும் பிறர்நலவுழைப்பும் பாரில் எங்கும் பரவுவது பயனளிக்குமன்றோ!

என்னென்ன காரண காரியங்களாயிருந்தாலும் தமிழ்மக்களில் இடம்பொருள் ஏவல் முதலிய வலியற்று ஒதுக்கப்பட்டவர்களாய் சாதாரண மனிதவாழ்க்கைச் சுதந்திரங்களுக்குரிமை யற்றவர்களாகச் சிலரிருப்பது யாவருக்குமெளிதிற் புலப்படக்கூடிய வுண்மை. அவர்கள் உயர்ச்சியடைய வேண்டுமென்பது அவசியம். (தொடரும்.)

இங்ஙனம்,
குமரதாஸ்,
உடுவில்.

5-3-29.

## தமிழ்ப்படிப்புமுறை.

இக்காலத்தில் தமிழர் சகலவிதத்தாலும் பாராட்டிக் கற்கப்படுவதாகிய நன்னூலிலே 'அறம் பொருளின்பம் வீடடை தனூற்பயனே' என்று ஒரு சூத்திரம் இருக்கின்றது இது கல்வி கற்பது எதற்காக என வினவினர்க்கு அதன்பயன் சொல்லவந்தது. இதன்பொருள் அறம் பொருள் இன்பம் வீடடைதல் என்னும் நான்கும் நூல்களைப் படிக்கிறதினால் வரும் பிரயோசனங்களாம் என்பது இவற்றுள் அறமாவது: திருவள்ளுவர் அறத்துப்பால், நாலடியார் அறத்துப்பால, ஆத்திசூடி, கொன்றைவேந்தன், வாக்குண்டாம், நல்வழி, நன்னெறி, திரிகடுகம், ஆசாரக்கோவை நான்மணிக்கடிகை முதலிய நூல்களைக்கற்று அறிந்து, அவைகளிலே சொல்லியபடி ஒழுகுதலாம். பொருளாவது திருவள்ளுவர் பொருட்பால், கணிதம், தருமசாத்திரம், சிற்பசாத்திரம் முதலிய நூல்களைக்கற்று அறிந்து உத்தியோகம், வாணிகம், சிற்பம் முதலிய தொழில்கள் செய்து, இம்மையின்பத்துக்கும் மறுமையின்பத்துக்கும் காரணமாகத் தேடப்படும் பொருளாம். இன்பமாவது: திருவள்ளுவர் காமத்துப்பால், கலித்தொகை, நற்றிணை முதலிய அகப்பொருளைக்கூறும் நூல்களைக்கற்று அறிந்து ஒருபாலார் மற்றைப்பாலாரோடு கூடி அனுபவிக்கும் இன்பமாம்.

வீடாவது: சிவஞானசித்தியார், தேவாரம், திருவாசகம் முதலிய சமய சாத்திரங்களைக் கற்று அறிந்து சரியாவர்த்தனம், ஆலயசேவை முதலிய சிவதொண்டுகள் விரதங்கள் அநுட்டித்தும் செய்தும் [illegible] ஆனந்தமடைதற்குரிய மார்க்கமாம். ஆகவே இந்த அறம் பொருள் இன்பம் வீடு என்னும் புருடார்த்தங்களை நல்வழியிலடைதற்குக் கல்வியே காரணமென்பதாயிற்று. இன்னும் தமிழர்களுடைய அலங்கார சாத்திரம் இம்மையின்பத்துக்கு மாத்திரமன்று மறுமையின்பத்துக்கும் ஏதுவாயுள்ளது இவ்வளவு இன்பத்தைக் கல்வி தருவதினாலன்றோ திருவள்ளுவநாயனார் "செவிக் குணவிலாத போழ்து சிறிது வயிற்றுக்கும் ஈயப்படும்" என்றார் "மடங்கொன்றறிவகற்றுங் கல்வியினாங்கில்லை, சிற்றுயிர்க்குற்ற துணை" என்றார், குமரகுருபரஸ்வாமிகள் இதற்காகவே நம்முன்னோர்கள் பிள்ளைகளுக்குச் சிறுவயசிலேயே கல்வி கற்பிக்கவேண்டுமென்று கருதிப் பள்ளிக்கூடங்களுக்குத் தங்கள் பிள்ளைகளை அனுப்பிக் கற்பித்துவந்தார்கள் அந்தக்காலத்திலே பெற்றாருடைய கருத்துத் தங்கள் பிள்ளைகள் சன்மார்க்கமும் சமயபத்தியும் உடையர்களாய் வருதல் வேண்டுமென்பதேயாம் இங்கிலீசு அரசு வந்தபின் இங்கிலீசுக் கல்வியை உத்தியோகத்துக்குமாத்திரம் என்று வைத்துக்கொண்டார்கள் தமிழிலேயுள்ள நீதிநூல்களைக் கிரமமாகக் கற்றவர்கள் தீயவழிகளிலே இறங்கிப் பாவமான தொழில்களைச் செய்ய எப்போதும் அஞ்சினார்கள். இதனால் அக்காலத்துப் பிள்ளைகளிடத்தே பெற்றாரிடத்தன்பும் அடக்கமும் பெரியாரைப் பேணுதல் முதலிய நற்குணங்களும் நிரம்ப இருந்தன.

அறம் பொருளின்பம் வீடென்பனவற்றிற்குக் காரணமான நூற்கல்வி இப்போது பள்ளிக்கூடங்கள் ஒன்றிலும் இல்லை எறக்குறைய அறுபது வருடகாலம் நமது அரசினர் தமிழ்க் கல்வியின வளர்ச்சிக்கென்று ஒரு தொகைப் பொருள் செலவழித்து நினைந்து உதவி நன்கொடை யென்று ஒன்று செய்யத் தொடங்கினார்கள் இதை அறிந்தவுடனே பள்ளிக்கூடங்கள் ஊரெங்கும் முளைக்கத் தொடங்கின. அரசினர் நாம் கொடுத்த தொகையை மேலும் கூட்டிக் கொடுத்தகந்து இரண்டு மூன்று வருஷங்களுக்கு முன்னே தொடங்கின. அதன் பின் பள்ளிக்கூடங்கள் வீட்டுக்கு வீடு முளைக்கத் தொடங்குகின்றன இப்போதுள்ள மாதிரியினாலே ஒருவரிடத்திலேயுள்ள பொருளை வாங்கி மற்றவர்களுக்கும் சரிப்பண்ணிப் பங்கிட்டுக் கொடுக்கிறதேயல்லாமல் கல்வியால் நாம் அடைய வேண்டிய முக்கியமான பிரயோசனம் இல்லை இப்பொழுது பள்ளிக்கூடங்களிற் படிப்பிக்கப்படுவன இயற்கை விளக்கம் ஆரோக்கியமுறை, ஆண் பெண் என்னும் இருபாலார்க்கும் (Drill) தபால் முத்திரை யொட்டும் விதம் வண்டிகளுக்கு விலகிப் போகவேண்டிய மாதிரி மலகூடங்களில் எப்படியிருந்து மலசலங்கழிக்க வேண்டுமென்னும் வேலை, புண் கழுவுதல் சமையல் முதலானவைகளாம். பிள்ளைகள் இவைகளை அறிந்திருப்பது ஆகாதகன்று. இவைகளுக்கெல்லாம் பள்ளிக்கூடப் படிப்பு வேண்டுவதில்லை இவைகள் வீட்டிலே பழகிக் கொள்ளத் தக்கன. இவ்வளவு காலமும் பாய், கடகம், சுளகு, விசிறி முதலிய பன்ன வேலை சமையல் வேலை என்னுமிவைகளை யார் எந்தப் பள்ளிக்கூடத்திற் படித்தவர். இவைகள் பார்த்துப் பழகவேண்டியவை இலக்கணம் படிப்பிக்க வேண்டியதில்லை அது வழக்கப் பேச்சிலே பழகிக்கொள்ளலாம் அதைபொரு பாடமாக வைத்து வீண்நேரம் போக்கக் கூடாதென்று சொல்கிற இன்ஸ்பெக்டர் இந்தப் பன்னவேலை முதலானவைகளை வீட்டிலே பிள்ளைகள் பழகிக்கொள்ள மாட்டார்கள் அவை பள்ளிக்கூடப் பாடமாயிருக்க வேண்டுமென்று சொல்வது பெருந் நூதனம். இனி வீடு பெருக்குகிற வேலை சீலை வெளுக்கிற வேலை தாமாக முகச்சவரம் செய்து கொள்ளும் வேலை வேலியடைக்கிற வேலை தண்ணீர் இறைக்கிற வேலை துலாமிதிக்கிற வேலை வீடுவேய்கிற வேலை முதலானவைகளும் பிழைப்புக்குக் காரணங்களாயிருக்கலினாலே அவைகளையும் பள்ளிக்கூடங்களிற் படிப்பிக்க வேண்டுமென்பார்கள் போலும். புண் கழுவுவது ஒரு பாடமாகும்போது இவைகளேன் பாடமாகக்கூடாது? இனி இவைகளிற்கெல்லாம் எத்தனை உதவிவித்தியா கர்த்தாக்கள் எத்தனை பரீக்ஷகர்கள் வேண்டப்படுவார்கள் சுவாமிக்குத் தான் தெரியும் புருடார்த்தமாகிய கல்விக்குரிய பள்ளிக்கூடநேரம் இந்தப் பன்னவேலை முதலிய கல்வியிலே கழிகின்றன இலக்கணம் வேண்டியதில்லை அந்தச் சனிவேண்டாம் என்கிற நம வித்தியா பகுதியார் ஒருபாட்டிலே ஒரு வரியில் ஒரு ஏட்டிலே புனத்தினை காப்பது என்றும் மற்றோரேட்டிலே புனத்தினைக் காப்பதென்றும் இருக்கின்றன இவற்றில் எது சரியென்று இலக்கணம் படியாதவனொருவன் எப்படி அறிவான் ஒரு ஏட்டில் திரைகடலோடியும் என்றும் மற்றொன்றில் திரைக்கடலோடியும் என்றுமிருக்கின்றன. இவற்றில் எது சரியென்று இலக்கணம் படியாதவனொருவன் அறிவான் தான் செய்யுந் தோத்திரங்களுக்கு அருத்தம் வழக்கத்தில் இருக்கின்றனவா என்று நினைக்கவில்லை நிகண்டையும் விலக்குகிறார்கள் தமிழிலுள்ள நிகண்டுகள் போல் இங்கிலீசிலும் இருந்தால் நம்முடைய நிகண்டுகளுக்கும் நல்ல மதிப்புண்டாகும் பாடமாக்கிற வேலையும் ஆகாது பாடம் பண்ணுகிறதினாலே பிள்ளைகளுடைய மூளை கெட்டுப் போகின்றது என்றும் நம்முடைய வித்தியா பகுதியார் சொல்லுகிறார்கள் முன்னிருந்த வித்துவான்களுக்கு அவர்கள் கற்றவை முழுதும நாவினிலே இருக்கும் 5000 பாட்டுகளுக்கு மேலே எந்தச் சமையத்திலும் எடுபாமற் சொல்லத்தக்கவராயிருந்த வித்துவான்கள் பலர் அகோர சிவாசாரியருக்குச் சமஸ்கிருதத்தில் 4, லக்ஷம் சுலோகம் பாடமாம். இவர்களுக்கெல்லாம் மூளை கெட்டுப் போகவில்லை ஐயையோ இவ்வளவு வேதங்களையுமன்றோ நம்முன்னோர்கள் எழுதாமல் பாராமல் மனனம் பண்ணி வந்தார்கள் பாடமாக்குவதாவது என்ன? ஒன்றை ஒருதரமோ பலதரமோ கேட்டாவது வாசித்தாவது ஞாபகத்தில் வைத்திருப்பதுதானே ஞாபகத்தில் வைத்திருப்பது மூளைக்குக் கேடு செய்யுமானால் படித்தவைகளை யெல்லாம் உடனே மறந்து விடுதல வேண்டுமென்பதுதான் இவர்கள் கருத்துப் போலும் ஒரு பரீக்ஷகர் ஒரு பள்ளிக்கூட அறிக்கையில் "The boys must be trained to use latrines" என்று எழுதியிருக்கிறார். இதற்காகவும் சில பிள்ளைகளை கோப்பாய்க்கு அனுப்புவோமா?

அரசினர் பாஷையைப் படிப்பித்துவிட்டால் பிள்ளைகள் பின் தங்கள் தங்களுக்கு விருப்பமான தொழில்களைத் தாங்களே கற்றும் கேட்டும் அறிந்தும் பழகிச் செய்வார்கள் அருமையான வைத்தியம் சோதிடம் முதலானவைகளை படிப்பிப்பது எவ்வளவு நல்லது புண்கழுவுதலும் பன்னவேலையுமா? படிப்பிக்கவேண்டியது பெரிய உத்தியோகஸ்தர்களுடைய சம்பளத்தைக் குறைத்து விட்டால் உத்தியோகம் உத்தியோகமென்று ஆசைபிடித்துத் திரியும் பலர் கைத்தொழில், கமத்தொழில்களைப் பள்ளிக்கூடங்களிற் படிப்பிக்கப்படாமல் தாங்களே பழகிச் செய்வார்களே.

இப்படியே நம்முடைய கல்வியின் நோக்கம் விபரீதமாய் முடிந்தது. சரசுவதிதேவியே இனி நம்மை இரக்ஷிக்க வேண்டும்.

வி. முருகேசையர்
வித்தியா விநோதசாலை
கொக்குவில் கிழக்கு.

## ஆவலாதி;

ஒருவரை அவஸ்தைப்படுத்துங் கேட்டின்மக்கள் உலகத்தில் அநேகருளர். அன்னவரைக் கண்டுகொள்ள நாம் பிறதேசம் போய்ப் பார்க்கவேண்டியதின்று. அவன் என்றும் சுணங்கனைப்போல் நம் காலைச் சுற்றி வாலையாட்டி வயிற்றையெக்கிப் பேரும் பெருமையும் பெருந்தூரப் பேச்சுமாய்த் தன்னைத் தான் புகழ்ந்து கொள்ளுவன். அங்ஙனமுடைய துர்சனன் நாள்விதம் புதிய வார்த்தைகளால் பிறமனிதரை ஆதாயப்படுத்திக் கொண்டு தன்னையும் அலங்கரித்துக் கொள்ளுவான்.

"துர்சனன் முகங்கடானுந் துலங்கிய கமலம் போலும், சற்சன னென்னும் வார்த்தை சந்தனக் குளிர்மைபோலு, முற்றிடு மிதையந்தானு முறைத்திடும் வயிரம்போலும், முற்பெற விருக்குமிந்த மூர்க்கர்தம் குணங்கள்தாமே".

முகம் தாமரைமலர்போலும் வார்த்தை சந்தனக்குளிர்மைபோலும் இருதயம் வயிரம்போலும் இருக்கிறதாகமேதாவிகளாற் குறிக்கப்படுகிறது இவர்கள் மட்டில் நற்குணமுடைய மாந்தர் செய்யத்தக்கதுதானென்ன? இருக்க ஆகாமியங்களை மனதில் நிறுத்திக்கொண்டு வாலிபரையும் இளம் பெண்களையும் ஆசைவார்த்தை சொல்லி யொன்றுக்கியதிலிருந்து ஏதோ தான் பெரும் மகிமையுடைய விரும்பி நரிக்குபுன் கண்டு காணம்போட்டபான்மையாக, மணவாளன் முன் சென்று நீர் கேட்டதை நான் தருவேன் என்று வெறும்பொய் பேசி சனசமூகத்தில் தம்மை வெட்கப்படுத்திக் கொள்ளும் பிறவிப்புளுகரும் நம்முன் நடமாடுகின்றனர்தானே

ஓர் பெருங்குணம்படைத்த மகிபனை, என்றும் ஆவலாதிபேசி மனிதரையணுப்பும் துர்ச்சனன் அன்னவரை ஆதாயப்படுத்த நினைத்தாலாகுமா? தக்க பெரியோர்சபையில் எவ்வளவு மூட்டுச்சாட்டுப் பொருத்திக் கொடுத்தாலும் அன்னர் நம்பத்தக்கதன்று

"தறிபட்ட சந்தனக்கட்டை பழுதாகினுஞ் சார்மணம் பழுதாகுமோ? தக்கபால் சுவறிடக் காச்சினுமதுகொண்ட சாரமதுரங் குறையுமோ, கிறைபட்ட கதிர்மணி யழுக்கடைந்தாலு மதினொள் குணமழுங்கிவிடுமோ, நெருப்பிடையுருக்கினுமடிக்கினும் தங்கத்தினிறையு மாற்றுங் குறையுமோ." என்றபடி நற்சிந்தையுள்ள ஒருமனிதனையேனும் ஆவலாதி தன்வசப்படுத்த முடியாதென்றே நாம் தீர்மானிக்கின்றோம். ஆகவே ஒவ்வொரு மனிதனுக்கும் பகவான் கொடுத்தருளிய வாயை அனுவசியப்படுத்தாமல், பிறரை இகழாமல் கோள் குண்டணி புறங்கூறலாகிய நீச்செயல்களினின்று நம்மைக் காப்பாற்றிக்கொள்வதே விரும்பத்தக்கது.

"சினமிறக்கக்கற்றாலுஞ் சித்தியெல்லாம் பெற்றாலும் மனமிறக்கக்கல்லார்க்கு வாயேன்பராபரமே" எனத் தாயுமான சுவாமிகள் சொல்லியது; மனம் நம்மை இழுத்துக்கொள்ளாமல் நாம் மனதை இழுத்துக்கொள்ளக் கற்பதே நம்வாயின் சாமர்த்தியமாகும் என்பதை உணர்த்தவே எனவே ஒவ்வொருவருடைய வாயும் பேசவேண்டியது பிறமனிதருக்கிடர் வருவியாமல் நீடிய தயவோடும், இரக்கத்தோடும் தன் சற்குண சாமர்த்தியத்தை வெளியிடவேண்டியது எல்லார்க்கும பரோபகார நன்மதியாயிருக்கும்.

(வரும்) —பூலோகசிங்கம், பலாலி.

## வைத்தியப்பகுதி.

சிசு வைத்தியத்தில் கைதேர்ந்த பிரபல வைத்தியர்கள் ஒரு குழந்தையின் ஐந்தாவது வயது வரை அக்குழந்தைக்கு எத்தகைய வியாதியும் வராதவாறு மிகச் சாக்கிரதையுடன் காப்பாற்றி விட்டால் பிறகு அக்குழந்தையின் ஆயுள் முழுதும் நல்ல திடகாத்திரமிருக்குமென்றும், எத்தகைய வியாதியும் அணுகாதென்றும் கூறுகின்றனர். உபாயமான வியாதிகளை ஆரம்பத்திலேயே சொஸ்தப்படுத்தாமையால் தான் நமது வியாதிகள் அதிகரித்து மிக்க அபாயத்தை உண்டாக்கிவிடுகின்றபடியால் வெள்ளம் வருவதற்கு முன் அணைபோடுவதே போல் வியாதி அதிகரிக்கு முன்னரே ஆரம்ப ஸ்திதியிலே அதை சொஸ்தப்படுத்திக் கொள்ள வேண்டும் இன்றேல் நகத்தால் கிள்ளி எறிவதை விடுத்து கோடரி கொண்டு வெட்ட வேண்டிய அவசியம் ஏற்பட்டுவிடும். முக்கியமாக நாம் நமது குழந்தைகளைக் கவனிக்கவேண்டும். தினந்தோறும் காலையில் எழுந்ததும் குழந்தைகளின் முகத்தை நிதானமாக உற்று நோக்கவேண்டும் சாதாரணமாக இருப்பதை விடுத்து ஏதேனும் உபாயமான மாறுதலைக் கண்டபோதிலும் உடனே அதற்குக் காரணமென்னவென்று ஆராய்ச்சி செய்து அதற்குத தகுந்த பரிகாரமும் செய்துவிட வேண்டும் சாதாரணமாக, சிறு குழந்தைகளுக்கு அடிக்கடி ஜலதோஷம்; உபாய சுரம், பூச்சிக்கடி, காதுவலி முதலியவைகளே ஏற்படுவதுண்டு ஜலதோஷம், ஆரம்பமாவது தலையிலிருந்துதான் ஆதலின் முதற்குறி காணப்பட்டதுமே உடனே குழந்தையை தக்க வைத்தியரிடம் அழைத்துச் சென்று அதற்கான பரிகாரஞ் செய்ய வேண்டும் வீட்டிலேயே சொஸ்தப்படுத்திக் கொள்ள வேண்டுமாயின் பரிசுத்தமான கற்பூரத்தைலத்தினுல் தோய்த்த கம்பளித்துணியை மூக்கினிடம் வைத்து அதை உட்பக்கம் சுவாசிக்கும்படி செய்வதால் குழந்தைசொஸ்தமடையும். எதையும் வைத்தியரிடம் கேட்டு அவர் யோசனைக்கிணங்க நடந்துகொள்வதே சிலாக்கியமாகும். குழந்தைகளுக்கு குறித்த காலத்தில் ஆகாரமளித்தல் வேண்டும் தாய்க்கு ஓய்விருக்கும் போது தான் குழந்தைக்கு ஆகாரம் கொடுப்பதென வைத்துக் கொண்டு கால நிர்ணயம் தவறி ஆகாரங் கொடுத்தால் குழந்தைப் பருவம் முதலே சரியாக ஜீரணமாகாமல் மலச் சிக்கல் ஏற்படக் காரணமாய்விடும். பெரியவர்களுக்கே மலச்சிக்கல் கூடாதென்றால் குழந்தைகள் விஷயத்தில் எவ்வளவு ஜாக்கிரதையாக இருக்க வேண்டுமென்பதைப் பற்றி யாம் அதிகம் கூறவேண்டுவதில்லை குழந்தைகளை வளர்ப்பவர்கள் தாய்மார்களே யாதலின் அத்தாய்மார்கள் சிசுபரிபாலன முறைகளைப் பற்றியும் சிசு வைத்தியத்தைப் பற்றியும் சிறிதளவேனும் அறிந்திருத்தல் அத்தியாவசியமாகும். (விவேகபாநு)

## பேய் கொண்டாலும் பெண்கொள்ளலாகாது.

ஓர் ஞான்று தெருத்திண்ணையில் தங்கியிருந்த ஔவையார் அவ்வீட்டுடையானை நோக்கி அப்பா? எனக்கு கொஞ்சம் அமுதளிக்க வேண்டுமெனக் கேட்க அவன் தருணம் பார்த்து, ஔவையாருக்கு ஏதேனும் பட்சணமளிக்கும்படி மனைவியிடங் கேட்க அவள் பூசைபோல் ஆர்ப்பரித்து பேசி எச்சில்நீர்ப் பானையால் அவன் தலையில் அபிஷேகஞ் செய்து அவனைத் தூற்றி அடித்தனளாக; இவைகளை யெல்லாம் பார்த்துக்கொண்டிருந்த ஔவையும்

"இருந்து முகந்திருத்தி யீரொடு பேன் பார்த்து, விருந்துவந்ததென்று விளம்ப—இருந்து முயாள், பாடினாள் பேய்ப்பாட்டைப் பாரச் சுளகெடுத்துச், சாடினாளோடோடத்தான்"

என்ற பாடலைப் பாடிப் போனதாக புஸ்தகங்களில் வாசித்தறிந்திருக்கிறோம் அத் தன்மைபோல் பேயாட்டமுடைய பெண்களும் சிலருளர்,

'பத்தாவுக்கேற்ற பதிவிரதை யுண்டானால்
எத்தாலுங் கூடியிருக்கலாம்—சற்றேனும
ஏறுமாறாக விருப்பாளேயாமாகில்
கூறுமற் சந்நியாசங் கொள்"

என்பதற்கிணங்க, பலர் ஆண்டி வேஷமானார்கள். பேய்கொண்டாலும் கொள்ளலாம் பெண் கொள்ளலாகாதே, என்பது சிவப்பிரகாச சுவாமிகளின் வாக்கு. பெண்களின் கொடுமை பேய்க்கொடுமையிலுங் கொடியது. பேயைக் காட்டிலும் பெண்கள் கொண்டவனை ஆட்டிவைப்பார்களென்பதே கருத்து ஆயினும் இவ் வுலகத்திலுள்ள எல்லாப் பெண்களையும் குறிப்பிடுவதல்ல ஆனால் மேற்கூறியபடி தூர்ச்செய்கையும் துர்க்குணமுமுடைய ஸ்திரீகளுக்கே, பொருந்தும் இப்பேர்ப்பட்ட மௌட்டீக பெண் ஜென்மங்கள் தங்கள் பெயரின் மகிமையையும் பெருமையையுமறியாதவர்களாவர் உலகத்தில் ஸ்திரீகளைப்போன்ற உயர்ந்த பிறவி வேறொன்றுமில்லை யெனலாம்

ஏனெனில் இவ்வறாம் பெண்களை அன்றி நடைபெறாது. இல்லறத்தை யின்றி உலகம் நடைபெறாது. உலகெல்லாம் பெண்பதற்குச சத்திசாமென்று பெயர் சத்தியென்றால் ஸ்திரீத் தன்மையுடைத்தென்பதாகும். எனவே உலகமே ஸ்திரீமயந்தான் உலகில் எல்லாஅமைப்புகளும் ஸ்திரீ ரூபமாகவும், ஸ்திரீ மயமாகவு, ஸ்திரீ நாமங்களைக் கொண்டதாகவும் விளங்குகின்றன ஆதலால் உலகம் நடைபெறுவதற்கு பெண்களே முக்கியமானவர்களாயிருக்கிறார்களென்றால் அவர்களுடைய பெருமையை அளவிட்டுச் சொல்ல இயலுமோ? அவதார மூர்த்திகளாய் விளங்கிய ஸ்ரீ கிருஷ்ண பகவான், புத்தர், சங்கரர் முதலானோரும் இவர்களின் வயிற்றினின்றே உற்பத்தியானவர்களென்றால் இவர்களுடைய பெருமையையும் மகத்துவத்தையும் யாரால் எடுத்துரைக்க இயலும் உலகத்திலுள்ள மக்களெல்லோரும் பெண்களின் வயிற்றினின்றே பிறந்தவர்களாயிருக்கிறார்கள் உலகத்தை ஆளுகின்ற ராஜாதிராஜர்களும் அவர்களுக்குத் துணையாக தக்க சமயத்தில் புத்தி புகட்டும் நன்மதியுடைய மந்திரிமார்களும் பராக்கிரமம் பொருந்திய படை மன்னர்களும், வீராதி வீரர்களும் யோகீஸ்வரர்களும் ஞானிகளும், குருக்களும் நீதிமான்களும் கல்விமான்களும், வித்துவான்களும், தத்துவ சாஸ்திரிகளும், கருங்கச்சொல்லின் பெரியோரும், சிறியோரும், நல்லோரும் பொல்லாதவரும், பிரபுக்களும், பிச்சைக்காரர்களுமாகிய சகல மக்களும் இம் மகத்துவம் பொருந்திய ஸ்திரீகளின் உடலினின்றே உற்பத்தியாகி பிறந்து வளர்ந்தவர்களாயிருக்கிறார்கள். மேலுமிவர்களைப் பூமாதேவி யென்றும் சமுத்திராதேவி யென்றும், லக்ஷ்மி தேவியென்றும் சொல்லிப் புகழ்வதுண்டு. இதுவுமன்றி தன்மையிலும் ஸ்திரீகள் பெரு பெருமை பெற்றவர்களாகவுமிருக்கிறார்கள் இதனாலே 'அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்'' ''மாதாவை யொருநாளும் மறக்க வேண்டாம்'' ''தாயிற் சிறந்தொரு கோயிலுமில்லை'' என ஔவைப் பிராட்டியார் ஒவ்வொரு வாக்கியத்திலும் தாயென்னும் பெண்பாலையே முன் வைத்து கூறியுள்ளார் ஆதலால் ஸ்திரீகள் எவ்வளவு பெருமையுடையவர்கள்? எவ்வளவு பாக்கியசாலிகள்? பெண்களில்லாவிடில் மக்களேது? உலகமேது? ஆகவே மக்களின் இல்வாழ்க்கைக்கு முக்கியஸ்தர்களாகவும் துணைவர்களாகவு மிருப்பவர்கள் அவர்களே இவ்வளவு மேன்மையும் மகத்துவமும், பெருமையுமுடைய ஸ்திரீகள் உலகத்திலே ஆண்மக்களுக்கடிமைகளாகி மிருகத்திற்கும் கீழாக நடத்தப்பட்டு வருகிறார்கள் அந்தோ என்ன பரிதாபம்! இப்பேர்ப்பட்ட பெருமை தங்கிய பெண்மணிகள் இவ்வளவு சிறுமையடைய வேண்டியதற்குக் காரணம் யாதோ? கல்வியறிவில்லாமையே யென்று சொல்லலாம்.

K சரஸ்வதி

## பஞ்சமா பாதக உயிர்ப்பலி.

நமது யாழ்ப்பாணத்திற் சிலகாலங்களுக்கு முன் அனேக கோவில்களில் கோரமான இக்கொலைத் தொழில் மிக மும்முரமாய் நடந்தது. அந்தந்த ஊர்வாசிகளின் சமயாபிமானத்தாலும் நன்முயற்சியாலும் சிவபெருமானில் அவர்கள் கொண்ட அன்பின் நிமித்தமாகவும் பஞ்சமா பாதகங்களுள் ஒன்றாகிய மிகப்பெரிய பயங்கரமான கொலைப்பாதகமாகிய ஆடுகோழிகளை வெட்டலென்னும் செய்கை யில்லாமலொழிந்தது. இன்னும் சிற்சில கிராமங்களில் மாத்திரம் பரிதாபமான இச்செய்கை நிகழ்ந்து வருகின்றது

இவ்வூர் இதர கிராமங்களைப் போலல்லாது இப்பொழுது சகல வளங்களிலும் உன்னதநிலையிலிருக்கின்றதென்பது யாவருமறிந்தவிஷயம். இவ்வளவு சீர்திருத்தி மற்றக்கிராமவாசிகளால் மதிக்கப் பெற்றவரு மிக்காலத்தில் நீங்கள் கேவலம், இங்கு வசிக்கும் மானுட ஜென்மமெடுத்த ஆண்மக்கள் ஒருவருக்காத்தக்க பயங்கர கோரகொலைப் பாதகச் செய்கையைச்சிறிது மச்சமின்றியும் ஆராய்வின்றியும் வெட்கமின்றியும் சிவபுண்ணியமென்பது எள்ளளவுமில்லாமல் நீங்கள் அருமையாய் வளர்த்த ஆடுகோழிகளை அலறத் துடிக்க நின்று பிரித்துப் பரலோகத் திற்கனுப்பி விடுகின்றீர்கள். கிராமவாசிகளே, பிணத்தாசை பேலீட்டினாலோ அல்லது எம்பெருமானிற் கொண்ட அன்பின் நிமித்தமாகவோ நீங்கள் இக் கொடூரமான தொழிலைப் புரிந்து வருகிறீர்கள் அந்தோ, உங்களுக்குப் பகவானிடத்தில் மெய்யன்பில்லையென்றும் மண்ணாசையுடன் பிணத்தாசை மிகுதியென்றும் இக்கொடியசெய்கைவெளிப்படையாகக் காட்டுகின்றதல்லவா. சமயாபிமானம் பூண்ட கிராமவாசிகளே, இப்பரம பிதாவாகிய முன்னிலையில் இக்கொடிய தொழில் புரியும் வண்ணம் ஏவிய வீரன் யார்

அந்தோ அநியாயம் அநியாயம் பகவான்சந்நிதியில் இப்பாதகத் தொழில் புரிய எவர் தான் உடன்படுவார் உங்கள் மனம் கல்லோ, மண்ணோ, மரமோ, ஐயோ! பாவம் என் இப்பாதகத்திற் காளாகின்றீர்கள். கொலையுடன் தான் விடுகின்றீர்களா? கோவில் வீதிகளையும் சோமுட்டிக் கடைவீதியாக்கி யல்லவா விடுகின்றீர்கள். புறச்சமயிகள் தங்களாலயத்தை இவ்விதம் செய்வார்களா? வியாபார நோக்கங் கொண்டே நீங்களன்பாகவும் அருமையாகவும் வளர்த்து ஆடுகோழிகளைக் கடவுளுக்குப் பலியிடுவோமென்றும் அவைகளுக்கு யாதேனும் ஒரு விக்கினமும் நோயுமும் பணத்திற்கழிவு வராமலும் இரட்சிக்கவேண்டுமென்றே அவரின் கிருபை வேண்டுகின்றீர்க ளல்லாது பிறிதொன்றுமில்லை ஆட்கொல்லியென்று அழைக்கப்படும் பாழும் பணத்தாசை பேலீட்டினாலே நீங்கள் தாயும் தந்தையும் நமக்கென்றும் காக்கும் குருவும் நமக்கென்றும் முறங்கும் இப்பாழும் தேகத்தை வளர்க்கவிரும்பி பகுத்தறிவில்லாவுயிர்களை அன்போடுவளர்த்து முடிவில் பாதகப் பலிக்குளைக்கின்றீர்கள். கிராமவாசிகளே உங்கள் கதியென்ன வாகுமோ வென்று எம்பெருமானுக்குத் தான் தெரியும்.

சில மூடச்சனங்கள் தங்களுக்கு அல்லது தங்கள் சுற்றமித்திரர்களுக்கு யாதேனுமொரு நோய் கண்டு வருத்துமபோதும், ஆபத்துக் காலங்களிலும் மாத்திரமே எம்பெருமான் தியானமவர்கள் மனத்திற் படுகிறது அப்போது அவர்கள் எம்பெருமானுக்குத் தாங்களருமையாய் வளர்த்த ஆடுகோழிகளின் ஆன்மாவை அர்ப்பணஞ் செய்து தங்களை ஆபத்தின் நின்றும் தப்புவிக்கும்படி பகவானை வேண்டி நிற்கின்றார்கள் ஆடுகோழிகளின் ஆன்மாவை அர்ப்பணஞ் செய்வதற்குப் பதிலாக அவர்களிலொருவரின் ஆன்மாவை எம்பெருமான் திருப்பாதங்களி லர்ப்பணஞ் செய்ய என் மனம் வருகிறதில்லையோ தெரியவில்லை ஆன்மாக்களில் வித்தியாசமில்லை யென்பதை இந்த ஆசடபூதிகளறிந்திலர் போலும்.

கிராமவாசிகளே நீங்கள் இக்கொடிய செயலை செய்கிறவரையில் உங்களைச் சைவசமயிகளென்று அழைப்பதற் கெவருமஞ்சுகின்றனர் சைவசமயாசாரப்படி ஒழுகுபவர்களே சைவசமயிகளென்றழைக்கப்படுவர் அதற்கும் உங்களுக்கு எவ்வளவு தூரம் பிரயாணமென்பதைச் சற்றே ஊன்றி ஆலோசியுங்கள்.

புலையன்றன் மலமுண்ணு மெமையுண்ணும்
புலையர்க்கு குலமென்ன நலமென்ன!!

என்று சேவல் பாடியதாக முன்னோர் கூறிய கவியை யறியீர்களோ இக்கொடிய செயலைத் தவிர்த்தல், அவ்வவ்வூரின் கண் வசிக்கும் ஒவ்வொருவருடைய கடமையாகும் என்பதை மறந்து போகாதிருக்கக் கடவர்.

தன்னுயிர்நீப்பினுஞ்செய்யற்கதான்பிறி
தின்னுயிர்நீக்கும்வினை

என்ற திருக்குறளும்.

அம்மாவெனவலறவாருயிரைக்கொன்றருந்தி
யிம்மானிடரெல்லாருமின்புற்றிருக்கின்றா
ரம்மாவெனுஞ்சத்தங்கேட்டகன்றமாதவர்க்
கும்பொய்ம்மாமிசமென்றுற்புசித்தவர்க்கென்
சொல்வதே!! என்றுபசுபதிபாசவிளக்கமும்.

கொல்லாவிரதங்குவலயமெல்லாமோங்க
எல்லார்க்குஞ்சொல்வதென்னிச்சைப்பரா
பரமே!! என்று தாயுமானவரும்.

ஆகிய முன்னோர்கள் கூறியிருக்கின்றனர். சைவ சாஸ்திரங்களும் மற்றும் நீதி நூல்களும் கொலை மிகப்பாவமான செயலெனக் கூறுகின்றது ஆடுகோழிகளை யறுத்துச் செய்யும் வேள்விகளை சைவநூல்கள் விதித்தில ஊன் புசியாதவர்களே சைவர் என்பதை யறியாமையினுற் கிடந்து தடுமாறும் பல மூடச்சனங்கள் தங்களைச் சைவரெனச் சொல்லிக்கொண்டே ஏழைப்பிராணிகளாகிய ஆடுகோழிகளைக் கோவில்களில் வெட்டி வயிறு நிரம்ப வுண்டு காலங்கழிக்கின்றனர் கடவுளுக்கு ஊன் விருப்பமாயின் கொலை வேள்வி செய்யும் கோவில்களில் ஆடுகோழிகளினிறைச்சிக் கறி முதலிய தினந்தோறும் வைத்துப் பூசனை செய்தல் வேண்டும் அக்கோவிலுக்குப் பூசாரிமார்களும் மாமிசம் புசிப்பவர்களாகளாகவே யிருத்தல் வேண்டும் கோவில் கொடியேறினால் விரதமென்று சைவ உணவுண்பவர்கள் பின்பு கடவுளுக்கு இறைச்சியிற் பிரியமென்று ஆடுகோழிகளைக் கொலை செய்தல் போலப் பேய்த்தனம் வேறில்லை இக்கொடிய தொழில் செய்வோர் அஞ்ஞானிகளேயாவர். கோயில்களில் ஆடுகோழிகளைக் கொலைசெய்யும் கொடிய வழக்கம் தமிழ்நாட்டில் முன்னில்லை, இடையிட்டே யிவ்வழக்க மேற்பட்டது முற்காலத்தில் வட இந்தியாவில் மிலேச்சரென்னும் சாதியாரிடத்தி லிவ்வழக்க மிருந்தது. பின்பு அவர்கள் தென்னிந்தியாவிலும் இலங்கையிலும் வந்து தமிழர்களுடன் சிறிது சிறிதாகக் கலந்தனர். அதன் பின்புதான் நம்நாட்டிலு மிவ்வழக்கமேற்பட்டது இவற்றைப் புண்ணியமெனக் கருதிய தமிழ்மக்களுக்காக நாயனர் எல்லாவிடத்துங் கொலை தீது. என வற்புறுத்தி யிருக்கின்றார். இக் கொலை பாவமென நினைவுறுத்தும்படி கிராமவாசிகள் முயற்சி செய்தால் அக்கோவிற் பூசாரிமார்கள் வரும்படிக்காகப் பிரியப்படுகின்றார்களில்லை. இக்கொடிய பழக்கத்தை நிறுத்தி விட்டால் பூசாரிமார்கள் உதவியாகச் சிலரை வைத்துக் கொண்டு ஆவேசங் கொண்டு கடவுள் வெட்ட வேணுமெனக் கூறுகின்றனர். இவர்களாவேசத்தை மெய்யெனநம்புமறிவினர்கள் ஆவேசம் சொன்னபடியே செய்கின்றனர். ஊரை அனுப்பிப் பணம் பறிப்பதற்கு இதுவுமோர் வழியாகும் இக்கொடிய வழக்கத்தை நிறுத்தப் பெரியோர்கள் முயற்சி செய்வார்களாக. மேலும் இவ்விதமாகக் கொடிய கொலை செய்பவர்கள் தனிமையாய் ஆடு கோழி கொலைசெய்கிற மதமென்றழைக்க வேண்டும் உலகம் நாகரிகம் அடைந்துள்ள இக்காலத்தில் இவ்வகையான கொடிய கொலைத்தொழில் செய்வதற்கு அறிவுடையவர்களுடன்படுவார்களா? கொலை செய்வோர்கள் இம்மை மறுமையி லடையும் பயனைத் திருமூலநாயனர் கூறியதைப் பாருங்கள்.

கொல்லிடுகுத்தென்றுகூறியமாக்களை
வல்லிடுக்காரர்வலிக்கயிற்றாற்கட்டிச்
செல்லிடுநில்லெனறுதீவாய்நரகிடை
நில்லிடுமென்றுநிறுத்துவர்தாமே.

ஆகையால் இக் கொடிய கொலைத் தொழிலாகிய பஞ்சமாபாதகச் செய்கையை நீக்கிச் சமயாபிமானம் பூண்டு நன்முயற்சிகளைப் புரியும் வண்ணம் சிவபிரான் திருவருள் பாலிப்பாராக.

எஸ். என். சர்மா,
சித்தங்கேணி.

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ளொன்றுமின்றி ஒருவருக்கும், குரோதமாவது வெறுப்பாவது ஏறபடுவதில்லை. ஆனால் அன்பைப்பற்றி யென்றாலோ, பிறர்துயரங்காணினுமகேட்பினும் அன்பின் ஊற்றுத்தானே ஊறிப்பெருகிவழிகின்றது இதைச்செயற்கைமுறைகளினால் அதன் அழிவுதேடாவிடின் அன்புதானே பொங்கி வழியுமன்றோ. நல்லவர்களாலும் கெட்டவர்களாலும் கடவடிக்கைகளடங்கியகதைப்புஸ்தகங்களை வாசிக்கின்றோம், நல்லவர்களுக்கு நல்ல முடிவையே எதிர்பார்க்கின்றோம். கெட்டவன் கூட அவ்வாறே விருமபுவான். தான் கெட்டவனாயினும் பிறரிடத்தில் ஒவ்வொருவரும் நற்குணங்களையே விரும்புகின்றனர். நல்ல முடிவையும் எதிர்பார்க்கின்றனர். தீயவனிடத்தில் காணப்படும் அளவுகடந்த தீமையை அறிவதனாலுண்டாகும் சந்தர்ப்ப வெறுப்பினால் அவனுக்குத் தீய முடிவைக் கோருவது போலத் தோன்றினும் தீயமுடிவின் கொடுமையை நோக்க இரக்க முண்டாகாமற் போவதில்லை. எனவேஒவ்வொருவரும் தீயவர்கூட உலகத்தில் எல்லாரும் நல்லவர்களாயிருந்து நல்லபயனைப் பெறவேண்டு மென்றே விரும்புவதை மனதின் அடிப்படையைப் போய்க் கிளறிப் பார்த்தால் தெரியும். இது உயிர்க்குணமாகிய அன்பின் புலப்பாடு அதை வெளி மனசினாற் கெடுத்து மனிதன் கேடுறுகின்றான்.


### விசேஷ அறிவிப்பு.

பியானோ, வில்லிபுளுற், பிடில், ஆர்மோனியம், கிறமபோன் முதலிய சகல வாத்தியங்களும், கடிகாரங்களும் திருத்திக்கொடுக்கப்படும். மேற்கூறிய கருவிகளுக்குத் தேவையான எந்தச் சாமான்களும் விலைக்குப்பெற்றுக்கொள்ளலாம்.

கே எஸ். இரத்தினம்,
பெரிய தெரு, யாழ்ப்பாணம்.

### தனலட்சுமி புத்தகசாலை.

அன்பார்ந்த வித்தியாபிமானிகளுக்கு அறிவிப்பது:—

இப் புத்தகசாலையில் சகலவிதமான பள்ளிக்கூடப் புத்தகங்களும், பள்ளிக்கூடங்களுக்கு வேண்டும் மற்றுஞ்சகலசாமான்களும், "யாழ்ப்பாணம் ஆரியதிராவிட பாஷாபிவிர்த்திச்சங்க" பரீட்சைக்குரிய புத்தகங்களும், ஆசிரியர் பிரவேசபரீட்சை, இரண்டாம் மூன்றும் தராதரப்பத்திரம்பெறுவோர்களுக்குரிய புத்தகங்களும், இதர நூல்களும் கிடைக்கும். வேண்டியவர்கள் நேரிலும் வி. பீ. மூலமாயும் பெற்றுக்கொள்ளலாம்.

ஆசிரியர்களுக்குத் தக்க கழிவு கொடுக்கப்படும்.

தனலட்சுமி புத்தகசாலை,
சுன்னாகம்.

### ஓறியன்றல் ஸ்ரோர்ஸ்,

பெரியதெரு, யாழ்ப்பாணம்.

எங்களுடைய இதரவியாபாரங்களுடன், பலபேர் வேண்டுகோளின்படி வீட்டிற்கு வேண்டிய கதிரைகள், கட்டில்கள், மேசைகள், அலுமாரிகள், பொதுவாக வீட்டிற்கு வேண்டிய எல்லாவித மரச சாமான்களும், எங்களுடைய மாதிரிகளைக்கொண்டு திறமான தச்சர்களால் கொழும்பில் செய்வித்து யாவரும் விரும்பும்படியாயும் யாவரும் வாங்குவதற்கேற்ற விலைகளில் விற்கின்றோம். ஒருமுறை வந்து பாருங்கள்.

வ. அ. துரையப்பா,
சொந்தக்காரர்.

### யாழ்ப்பாணம் அப்போதிக்கரிஸ்.

(பொன்னுச்சாமி ஷாப்)

பெரியதெரு, யாழ்ப்பாணம்.

பட்டினத்திற்குச் சாமான் வாங்க வந்தால் பிற கடைகளின் விலைகளை அறிந்திருந்தாலும், எங்கள் ஷாப்பின் விலைகளையும் சாமான்களையும் ஒத்துப்பார்த்து வாங்கவும்

பலவிதமான வேஷ்டிகள் சால்வைகள் ஷர்ட் சிலைகள் மற்றுமுள்ள எல்லா ஷாப்புச் சாமான்களும் நேரிலும பிரத்தியேகமான ஏஜண்டுகள் மூலமாகவும் வரவழைத்து விற்கின்றோம்.

டாக்குத்தர்களால் குறிக்கப்பட்ட எல்லாவித மருந்துவகைகளும், எங்கள் மருந்து ஷாப்பு பிரிவில், நற்சாட்சிப்பத்திரம் பெற்ற ஆட்களைக் கொண்டு, விலை சகாயமும் சுணக்கமின்றியும் தயாரித்துக் கொடுக்கப்படும் எல்லாப் பேட்டன்ட் மருந்துகளுங் கிடைக்கும்.

Dr. S. Ponnusamy,
Proprietor & Manager.


Published by V. M Kandiah for and on behalf of the Jaffna Depressed Classes Association Chunnagam & printed at the Saiva Prakasa Press, Vannarpannai

V. M. Kandiah
Chunnagam